
# தொண்டன்

புரட்டாதி - 1988 4-50



பாரதி!

அவன் ஒரு புதுப்பிறவி.
தமிழ் உலகின்
விடிவெள்ளி
தமிழ்க்கவிதை அறையில்
புத்தொளி பரவ
சாளரம் திறந்துவிட்ட
சரித்திர புருஷன்
சோற்றுக்காய்ப் பாடாமல்
மக்கள்
வாழ்வுக்காய்ப் பாடிய
மா கவிஞன்.
சீழ்ப்பிடித்த சமூகத்தை
சிந்தனை மருந்திட்டு
செப்பனிட முயன்ற
செம்மல்
வாழ்க அவன் பெயர்!
வளர்க தமிழ் மொழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

~~ஜனவரி~~ பெப்ரவரி - 1988

மலர்: 20 இதழ்: 07



ஆசிரியர் :
பீ. ஜோசப்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்



வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-


## உள்ளே...-


1. உங்களோடு கொஞ்சம் ... 1
2. சிறுகதை ... 2
3. கவி ஆரம் ... 6
4. இரட்சணிய யாத்திரிகம் ... 8
5. இலக்கிய அதிர்வுகள் ... 10
6. விவிலியத்தின் பார்வையில் 11
7. தொடர் கதை ... 13
8. வீடியோ கலாச்சாரம் 16
9. இளைஞர் அரங்கம் ... 18
10. பாரதியின் அரசியல் பார்வை 19
11. இலக்கியச் செய்திகள் ... 23
12. உங்களுக்குத் தெரியுமா? 24
13. மாணவர் பக்கம் ... 25
14. விவிலியப் புதிர் ... 27


**எழுதுங்கள்!**

கிறீத்தவ - சமூகச் சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்,

புதிய சிந்தனைகளுக்கு - புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள்! ஏற்றவையாயின் பிரசுரிப்போம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்களோடு கொஞ்சம்....

ஆண்டு நிறைவு.
பிறப்புக்கும் ஓர் ஆண்டு நிறைவு.
இறப்புக்கும் ஓர் ஆண்டு நிறைவு.
நன்மையான நிகழ்வுக்கும் ஓர் ஆண்டு நிறைவு.
துயரமான விளைவுகளுக்கும் ஓர் ஆண்டு நிறைவு.
இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓர் ஆண்டும் நிறைவு பெற்று விட்டது.
சமாதான ஒப்பந்தம் பெயரளவில் நன்மையான நிகழ்வாக இருப்பினும் அதன் பின் விளைவுகள் பாதகமாக இருந்ததை ஓர் ஆண்டு நிறைவு நன்கு உணர்த்திவிட்டது.
இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சிக்கும் ஒவ்வொரு ஆண்டு நிறைவு வைக்கலாம்.
ஆனால், ஒவ்வொரு முயற்சியும் படுதோல்வியில் முடிவது மறுக்க முடியாத உண்மையாகி விட்டது.
சாண் ஏற முழம் சறுக்குகிற கதையாக ஒவ்வொரு முயற்சியின் பின் விளைவுகள், பிரச்சினையை முன்பிருந்ததைவிட மிகமோசமான நிலைக்குத் தள்ளி விடுவது நமது கசப்பான அனுபவமாகி விட்டது.
ஒவ்வொரு ஆண்டு நிறைவும் மனிதனைச் சிந்திக்க வைக்க நல்ல சந்தர்ப்பமாகும்.
சமாதான ஒப்பந்தத்துக்குக் கைச்சாத்திட்டவர்கள் 'தங்கள் நோக்கம் நிறைவேறாததன் காரணம் என்ன?' என்று தங்களையே கேட்க வேண்டிய சந்தர்ப்பம் இது.
ஒருவர் மேல் ஒருவர் பழியைச் சுமத்திக் கொண்டு காலத்தைக் கடத்தினால் இன்னும் பல ஆண்டு நிறைவுகள்தான் மிஞ்சும்; நோக்கம் நிறைவேறாது.
சமாதானம் என்பது வானத்திலிருந்து வந்து விழும் ஒன்றல்ல.
உண்மையும் நீதியுமின்றி சமாதானம் தலைகாட்ட மாட்டாது.
அதாவது சமாதானம் என்ற பயிர் விளைய வேண்டுமானால் உண்மை என்ற நிலமும் நீதி என்ற நீரும் அடிப்படையாக அமைய வேண்டும்.
உண்மை என்பது உள்ளத்திலே கள்ளமில்லாமல் செயல்படுவது.
நீதி என்பது ஒவ்வொருவருக்கும் உரியதைக் கொடுத்து விடுவது.
இந்த இரண்டும் இல்லாமல் சமாதானத்திற்காக எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் விழலுக்கிறைத்த நீராகத்தான் இருக்கும்.
இதனை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.
முதன் முதலில் உண்மையையும், நீதியையும் நிலைநாட்டப் பாடுபடுவோம்.
சமாதானம் தானாகவே தழைத்தோங்கும்.

- பி, ஜோசப்.

---




நற்செய்தியை அறிவிக்காவிடில்
ஐயோ எனக்குக் கேடு.

1 கொரி. 8/16.

## சிறுகதை

# ஒரு கௌரவ சிறைப்பறவை

'இஞ்சருங்கோ'

சாப்பாட்டை முடித்த அப்பா வழக்கம்போல சுருட்டுப் பற்றவைக்கவென, பொயிலையினை சுற்றிக்கொண்டிருக்கையில், அவருக்கருகாக வந்தமர்கிருள் அம்மா.

''அந்தப் பொடியனைப் பற்றி விசாரிச்சுக்கொண்டு வரச்சொன்னனன் போனீங்களே?''

''எந்தப் பொடியன்?''

'போச்சடா. இவள் தேவியின்ரை விஷயமாய் நான் அலையாத அலைச்சல் அலையிறன். உங்களுக்கெண்டால் கொஞ்சங்கூட அவளிலை, அவளின்ரை எதிர்காலத்திலை கரிசனையே இல்லை'

'இப்ப என்னை, என்ன செய்யச் சொல்லிருய்?'

'நீங்கள் ஒருவிதமான எண்ணம் சிந்தனையுமில்லாமல் இருக்க அவளுக்கின்னுமென்ன பதினெட்டு வயதே? வாற ஆவணியோடை முப்பத்தைஞ்சு முடிஞ்சு, முப்பத்தாறு தொடங்கப் போகுது'

முகட்டையே வெறிக்கப் பார்த்தவாறு படுத்துக் கிடந்த தேவிக்கு அப்பாவின் மௌனம் புரியாமலில்லை. அவளைப் பற்றி அவருக்குப் பிரியம் இல்லாமலில்லை. எல்லோரும் தமக்குத்தாமே சொல்லிக்கொள்கின்ற அந்த நொண்டிச் சமாதானம் 'இன்னும் விதியும் வேளையும் இவளுக்கு வரவில்லைப் போலும்' என்ற ஆறுதலையே தனக்குள் ஆத்மபலனுக்கிக் கொண்டாரோ என்னவோ அமைதியாக இருக்கிருர்.

ஆனல் இந்த அம்மா நெருப்பை மடியில் கட்டிக் கொண்டவளைப்போல, அலையாய் அலைவதைப் பார்க்கத் தேவிக்கே பெரும் பரிதாபமாய் ஏன் பிறந்தோமோ? என்றிருக்கும்.

'புரேக்கன் சொல்லுருன் நல்ல பொடியனும், பீடி, சிகரட்கூட இல்லையாம். தொழிலும் நல்லது மாதிரிக் கிடக்குது. ஒருக்கா விசாரிச்சுப் பாருங்கோவன். ஒருவேளை சரிவந்தாலும் சரிவரும்'

'எடி! விசரி, புரேக்கன்ரை கதையும் ஒரு கதையெண்டு நம்பிறியே'

'உப்பிடிச் சொல்லிச் சொல்லி நீங்களே அவளின்ரை வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடுறியள்'

'முந்தியுமொருக்கா உப்புடித்தானே, புரேக்கன் 'ஆஹா ஓஹோ' எண்டு புழுகினன். போய் விசாரிச்சால் பொடியன் முகங்கழுவிறதே சாராயத்திலை தானுமெண்டல்லே விட்டனுங்கள். இதுகளென்ன அவசர அவசரமாய் முடிக்கிற அலுவலே. கொஞ்சம் பொறு, வெளிலை நாலு பேரிட்டை முதல் விசாரிப்பம்.'

அம்மா மேற் கொண்டு எதுவுமே பேசாமல் விசுக்கென எழுந்து போவதனை அவளது காலடியோசை தேவிக்கு உணர்த்துகிறது.

முப்பத்தைந்து வருடங்கள்......?

இத்தனை வருடத்திலும் அவள் எதனைச் சாதித்தாள்? எதுவுமே இல்லை? அவளை எண்ணிப் பெற்ருரைக் கவலைப்பட வைத்ததைத்தவிர, அவளுக்கென்ருெரு வாழ்வைத் தேடிக் கொடுத்துவிட வேண்டுமென அவர்களைப் பேயாய் அலைய வைத்ததைத் தவிர வேறெதுவுமே இல்லை.

இதுவரை நாளும் அவளுக்கெனப் பார்த்த வரன்கள் எல்லாமே ஒவ்வொன்ருய், ஒவ்வொரு காரணத்திற்காய் தட்டுப்பட்டுப்போனதை விதி என்பதா? அல்லது ஆண்டவன் சித்தம் அதுவென்பதா? அவளுக்கே புரியவில்லை. கடைக்கண்ணேரமாய்வழிந்த கண்ணீர் கன்னத்தின் வழியோடித் தலையணையை நனைக்க எப்போது உறங்கிப் போனேம் என்பது தெரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ★ ஜனகமகள் சிவஞானம் ★

தவளாய் ஆழ்ந்து போனுள் தேவி.

விடியற்காலையில் உறக்கம் கலைந்து இவள் எழுந்து பார்த்தபொழுது நன்ருகவே நிலம் வெளித்திருந்தது.



மனம் மட்டும் இருளால் கனத்துப்போயிருக்க பாயைச் சுருட்டி ஓரமாய் வைத்துவிட்டுப் பற்பொடியால் பல்லைத் தேய்ப்பதற்கிடையில் பூமரங்களை நோட்டம் விடுகிருள்.

என்னமாய் மலர்ந்து நிற்கின்றன இவைகள்!

இந்தப் பூக்கள், மரங்களிலொன்ருய் ஏன் பிறக்காது போனேன்...?

கேற் கிறீச்சிடுகிறது.

தேவி திரும்பிப்பார்க்கிருள்.

அம்மா கோயிலிலிருந்து திருப்பிக்கொண்டிருக்கிருள்.

அவசர அவசரமாய் உள்ளே நுழைந்தவள்.

'இஞ்சருங்கோ, இஞ்சருங்கோ'

அப்பாவை நோக்கி, பரபரப்பாய் அம்மா போனதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்ற எண்ணத்தில் காதைத் தீட்டிக் கொள்கிருள் தேவி.

'கோயிலாலை வரேக்கை செல்வத்தைப் போய்க் கண்டு கொண்டு வந்தனுன்.'

'.........'

'பொடியன் தன்னேடை தான் வேலை செய்யிறதெண்டார். அருமையான பொடியனும். நல்ல குணம் எண்டார்'.

'முதல்லை தேத்தண்ணியைக் கொண்டுவா'

'இப்ப மாப்பிளை கிடையாத காலம், உங்கடை பிள்ளைக்கும் வயசு போட்டுது. நீங்கள் வந்து பொடியனைப் பார்த்திட்டுப் பிறகு முடிவு செய்யுங்கோ எண்டார்'

'எடி ஆத்தை! விடிய வெள்ளணகண்முளிச்ச என்னை முதல் முகம் கழுவி, தண்ணி வெச்சி குடிக்க விடு பாப்பம்'

'ம்... 'மிடுக்கார் சரக்கு இருக்க விலைப்படும்' எண்டு இவ்வளவு நாளும் இறுமாந்து கொண்டிருந்து இண்டைக்கு இவளுக்கு இவ்வளவுத்துக்கு வயதேறிப்போய்க் கிடக்குது. இனியெண்டாலும் கொஞ்சம் கரிசனை காட்டுங்கோ பாப்பம்.'

அம்மா முணுமுணுத்தவாறு அடுப்படியை நோக்கி வருவதற்கிடையில் அடுப்பைப் பற்றவைத்துவிட்டாள் தேவி.

என்னத்துக்கு எந்தநேரம் பார்த்தாலும் அப்பாவோடை எரிஞ்சி விழுந்து கொண்டிருக்கிறியள்?

'எங்கடை வீட்டலுவல்களிலை எந்த விஷயத்திலை தான் அக்கறைகாட்டி நடந்தவர் சொல்லு பாப்பம். நானும் அந்தநாள் தொடக்கம் இவரோடும், இவற்றை ஆக்களோடும் இடிநாய் படாத நாள் எது சொல்லு பாப்பம்.

'இப்ப இஞ்சை ஆருக்குக் காது செவிடெண்டு உந்தக் கத்துக் கத்திறியள்'

'பின்னை என்னடி? உனக்கு நாற்பது வயது தாண்டின பிறகே கலியாணம் செய்து வைக்கப் போகுது மனுஷன்'.

எதிர்த்துக் கதைப்பதால் எந்தவிதமான பிரயோசனமுமே இல்லை என்ற முடிவுக்கு வந்த தேவி தனக்குள்ளாய் மௌனித்துப் போகிருள். ஆனல் அம்மாவோ நிறுத்துவதாய்க் காணேம். பழைய சீலை கிழிந்த மாதிரி நடந்து முடிந்துபோன பொட்டுக் கேடுகள் எல்லாவற்றையும் இழுத்து வைத்துக்கொண்டு ஒரேயடியாக அழுது, குழறி ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தாள். அவை காதில் விழுந்தது பாதி, விழாதது பாதியாய் தேநீரைத் தயாரித்து முடிக்கிருள் தேவி.

அப்பா வழக்கமாய் குடிக்கின்ற கிளாசைக் கழுவி அதற்குள் தேநீரை எடுத்துக் கொண்டு வந்து அப்பா வழக்கமாக அமர்கின்ற கதிரையைப் பார்க்கிருள் அது வெறுமையாய்க் கிடக்கிறது. இறைவணக்கம் முடிந்து அப்பா வரவில்லை போலும் என்ற நினைவோடு தேநீரை மேசையில் வைத்து மூடிவிட்டு வந்து அம்மாவுக்கும் எடுத்துப் போய் முன்னல் வைக்கிருள்.

நெடுநேரமாய் அப்பாவின் சிலமன் எதனையும் காணுததால் மீண்டும் வந்து பார்க்கிருள் தேவி, தேநீர் அந்த இடத்திலேயே அவள் வைத்தவாறே கிடக்கிறது. ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வொரு இடமாய்த் தேடிப் பார்க்கிறுள் எங்கேயும் அவர் இல்லை.

மளமளவென வந்து அப்பாவின் குடையையும், செருப்பையும் பார்க்கிறுள். அவை மட்டும் இருந்த இடத்தில் இல்லாதிருந்தன. அப்பா சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ புறப்பட்டுப் போய் விட்டார். விடிகாலை வேளையில் தேத்தண்ணியைக்கூடக் குடிக்க விடாமல் அம்மாவின் நச்சரிப்பு மிகைப்பட்டுப் போனதை நினைக்க இவளுக்குள் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. எல்லாமே தன்னுல் தானே என மனது சமாதானப்பட்டுக் கொள்கையில் எல்லாமே அடங்கி, அழுகையாய் கண்ணீர் குளம் வெட்டிக்கொண்டது.

உச்சி வெயில், உடற்புழுக்கத்தை விட மனப்புழுக்கமே ஓங்கி, பல முறையாய் வாசலையே பார்த்து நிற்கிறுள் தேவி.

நாயின் சந்தோஷ முனகல். அப்பா வந்துவிட்டார்.

முழங்கையைத் தலைக்கு முண்டு கொடுத்துப் படுத்துக் கிடந்த அம்மா எழுந்து முந்தானையைச் சரிசெய்தவாறு வாசலுக்குப் போகிறுள்.

தேவிக்கோ அப்பா காலையிலும் தேநீர் பருகாத அந்தரம்.

'நீ அவளுக்குக் கலியாணம் பேசிறதை விட்டிட்டு. ஒரு பாழ்கிணறுய்ப் பார்த்துப் பிடிச்சுத் தள்ளி விடு'

'ஏனப்பிடிச் சொல்லுறியள்?

'அவனுக்கு ஒரு கால் சொத்தியடி'.

அம்மா வாய் அடைத்துப்போய் நிற்க. அப்பாவிற்குத் தேனீரை தேவி எடுத்துப் போகிறுள்.

'இஞ்சரப்பா, வழிலை உவன் வடிவேலுவைக் கண்டனுன். தானும் பார்க்கிறன் எண்டு பிள்ளையின்ரை குறிப் பொண்டு தரச்சொன்னவன். எடுத்துக்கொண்டு வா தேவி. கொண்டுபோய்க் குடுத்திட்டு வருவம்!

உள்ளே போன தேவி. மளமளவென வெளியே வருகிறுள். அப்பா, அம்மா திகைத்துப்போய் நிற்க கையில் கிடந்த குறிப்பினைக் கிழித்து வீசுகிறுள்.

'அப்பா! இன்றைய இக் கட்டான காலகட்டத்திலை அதே ஊனம் எங்களுக்கும் ஏற்படாதெண்டில்லை'.

'எடியே! உனக்கென்ன பைத்தியமே? ஊர்சனம் கேள்விப்பட்டால் 'மணியம் இருக்குமட்டும் இருந்தான். இப்ப ஏலாத நிலையிலை ஒரு சொத்தி மாப்பிளையை எடுத்துப் போட்டான்' எண்டு எங்களை எல்லாம் எவ்வளவு தூரம் கேலி பண்ணும்? சொல்லு பாப்பம்'.

'உங்கடை உந்த வறட்டுக் கெளரவம் தான் என்னை இவ்வளவு காலமும் சிறை வைச்சிருந்தது. அப்பா, அந்தச் சிறையை உடைக்கிறது எண்டு நான் முடிவெடுத்திட்டன்.

'தேவி!'

'பேராசை பிடிச்ச எங்கடை சமுதாயத்தாலை ஊர்ச்சனத்தாலை எனக்கொரு வாழ்வைத் தர முடிஞ்சுதா? இல்லை. அப்பிடிப்பட்ட ஊருக்கும், உலகத்துக்கும் ஏன் நீங்கள் மண்டியிடுறியள்? சொல்லுங்கோ...'

'......?'

'அப்பா, உங்கடை வறட்டுக் கெளரவம் என்ற போர்வையாலை மூடி என்னைச் சிறை வைச்சு வதைச்சது போதுமப்பா? கருணை காட்டுங்கோப்பா. இந்த சந்தர்ப்பத்தைக்கூடத் தவறவிட்டு இதையே ஆயுள் தண்டனையாய் மாத்திப் போடாதேங்கோப்பா!

ஆவேசமாகிப் போன அவளையே அம்மா வெறிக்கப் பார்த்து நிற்கிறுள். அவளின் வார்த்தைகளின் தாக்கம் தாளமாட்டாதவராய் அப்பா தலைகுனிந்து போய் நின்றுர்.


(கற்பனை)

## சீனுவில் மாற்றம்

சீனுவில் கிறிஸ்தவ மதப்பிரசார நூல்கள் மற்றும் பைபிள் அச்சிட ரூபா ஒன்பதரைக் கோடி செலவில் அச்சகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. சீனுவில் மதப் புத்தகங்கள் வெளியிட முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அச்சகம் இது. இதன் ஆரம்ப விழாவில் 9 நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர். சீனப் புரட்சியின்போது பைபிள் வைத்திருப்பதே குற்றமாகக் கருதப்பட்டது. தற்போதைய சீன கம்யூனிச அரசு மதங்களைத் தடை செய்தாலும், ஓரளவு தற்போது அனுமதி வழங்கி வருகிறது என்பதற்கு இந் நிகழ்ச்சி ஓர் சான்றுகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஜெர்மனியில் ஆலய வரிகள்.

- ☐ ஜெர்மனியில் ஒவ்வொரு கிறீஸ்தவனும் ஆலய வரி கட்டியாக வேண்டும்.
- ☐ அரசாங்கமே இந்த வரியை தன் பொறுப்பில் வசூலித்து, வசூல் கட்டணமாக ஒரு தொகையைப் பிடித்துக்கொண்டு மீதியைத் திருச்சபைக்குக் கொடுக்கிறது.
- ☐ மேற்கு ஜெர்மனி சமஷ்டி அமைப்பைக் கொண்டது, மத்திய அரசு கத்தோலிக்க திருச்சபையின் வசூல் ஏஜெண்டாகவும், மாநில அரசு பிரிந்த சபையின் வசூல் ஏஜெண்டாகவும் செயல் படுகின்றன.
- ☐ உள் நாட்டிலிருந்து கிடைக்கும் நிதியுதவி ஜெர்மானிய திருச்சபை ஏற்று நடத்தும் பல கருணை நிறுவனங்களை (Charities) நல்ல முறையில் நிர்வகிக்கப் போதுமானதாக இல்லை, பற்றாக்குறை. ஆனால் பற்றாக் குறையை வேறு வழிகளில் சமாளிக்கின்றனர். வேறு வழிகள் என்றால் வத்திக்கானின் உதவியா? ம்ஹூம் வெளிநாட்டு உதவியே எங்களுக்கு வேண்டாம் என்று நிமிர்ந்து நிற்கிறார்கள் ஜெர்மானியர்கள்.
- ☐ செலவினங்கள் வரையறுக்கப் படுவதிலும் நிதானம். முதலில் ஜெர்மனியின் கருணை நிறுவனங்களைச் சார்ந்து செயல்படும் திட்டங்களுக்கு ஆகும் செலவு இறுதி செய்யப்பட்ட பின்னர் அதற்கு இசைவாக மற்றச் செலவினங்கள் வரையறுக்கப்படுகின்றன. தென் அமெரிக்கா, இந்தியா, இலங்கை இந்த மூன்று நாடுகளுமே மேற்கு ஜெர்மனியின் செல்லப் பிள்ளைகள். மேற்கு ஜெர்மனியின் கருணை நிறுவனங்களால் இவை பெருமளவு பயன் பெறுகின்றன.
- ☐ வரி வசூலில் கடுமையோ கண்டிப்போ கிடையாது? திருச்சபையின் அருட் சாதனங்களோ, இறுதிச் சடங்குகளோ யாருக்கும் மறுக்கப்படுவதில்லை.

அது சரி; நாம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு அயல் நாட்டுப் பணத்தில் காலந்தள்ளப் போகிறோம்?



# சில மருத்துவக் குறிப்புக்கள்

★ வெறும் சோற்றுப் பருக்கையில் கார்போஹைட்ரேட் என்ற மாச் சத்து மட்டுமே உள்ளது.

★ மனித உடலில் அதிக வலுக்கொண்ட தசை நார்கள் இதயத்தில்தான் உள்ளன.

★ இரத்த தானம் செய்யும் ஒவ்வொருவரிடமும் 200 மில்லி இரத்தம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

★ பச்சைக் காய் கறிகளை வேக வைக்க சோடா உப்பு சேர்க்கும்போது அதிலுள்ள B விட்டமின்கள் அனைத்தும் அழிந்து விடுகின்றன.

★ காலை, மாலை இளம் வெயிலில் மட்டுமே D விட்டமின்கள் இருக்கிறது.

★ சாதாரண நிலையில் மனித இதயம் 72 முறை துடிக்கிறது.

★ மாலைக் கண்நோய் உள்ளவர்கள் தினசரி இரண்டு பச்சைக் காரட்டுக்களைத் தின்று வந்தாலே போதும் வேறு மருத்துவம் தேவையில்லை.

★ முழுமையாக வெந்த முட்டையை விட பாதி வெந்த முட்டை நான்கு மடங்கு சத்து மிகுந்தது.

## நம்பிக்கை

☐ நம்பிக்கை என்றால் என்ன?...

★ 90 வயதில் திருமணம் முடித்த கிழவனார் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் வீடு பார்ப்பதே நம்பிக்கையாகும்.

- ஒரு பத்திரிகைத் துணுக்கு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கவி ஆரம்

## பயமாக இருக்கிறது...!

★ அமிர்தகழியான்

எனக்கு
ஒரே பயமாக இருக்கிறது!
என்னுடைய
பச்சிளம் பாலகர்கள்
பெரியவர்களானால்......

நான்
வால்பிடித்து
வாழ்வதையும்
கால் தொட்டுக்கும்பிட்டு
காட்டிக்கொடுத்து
காசு சேர்ப்பதையும்
அவர்கள் அறிந்து
அழித்து விடுவார்களோ ?

எனக்கு
ஒரே பயமாக இருக்கிறது.

சின்ன வயதிலேயே
சன்னம் போட்டுச் சுடும்
விளையாட்டுத் துப்பாக்கி
கேட்கிறுர்கள் !

பெரியவர்களானல்......

பீரங்கிக் குண்டாக
முதலில்
என்னைத்தான்
பாவிப்பார்களோ?
எனக்கு
ஒரே பயமாக இருக்கிறது!

## விடிவொன்று வேண்டும் !

- எம். ஐ. எம். ஜாபீர் ★

நெஞ்சுக்குள் கறைபடியச் செய்யும் வெய்ய
நெருப்பை நிகர் குணங்களெலா மகலவேண்டும்!
வஞ்சம்,பொறு மை,கபடம் கர்வம் யாவும்
வளருமெழி லன்பாலே விலக வேண்டும்!
பஞ்சமெனத் தினம்பசியால் ஏங்கு வோர்கள்
பரிதாபநிலை நீங்கி மகிழ வேண்டும்!
அஞ்சி பிறர் முன்னிலையில் அடங்கி வாழ்வோர்
அடிமைவிலங் கொடிந்தொழிந்து போகவேண்டும்!

துப்பாக்கி யேந்தியுரி மைகள் வேண்டித்
தூக்கமுமில் லாதுயிரைப் பணயம் வைத்து
அப்பாவி இளைஞர்கள் போரில் மாளும்
அழிநிலைதீர்ந் தவருரிமை பெறுதல் வேண்டும்!
நப்பாசை யொடுபெரு மூச்சில் வேகும்
நங்கையரை வாட்டும்வர தட்சணைப் பேய்,
இப்பாரை விட்டோடிப் போய கன்று
இன்பொழுது பெண்டிர்க்குப் புலர்தல்வேண்டும்!

வனப்புறுநற் குணமனையாள் வீட்டிலே நல்
விளக்கன்ன வீற்றிருக்கத் தாசியர்க் காய்,
தனமிறைத்து அலையுந்தீ யாட வர்கள்
தான் தோன்றித் தனம் நீங்கிப் போகவேண்டும்!
அனலொக்கும் வறுமையினுல் தேகத்தை வேற்(று)
ஆடவர்க்கு விற்றுதரம் வளர்க்கும் மாதர்,
மனங்களிலே நல்லுணர்வு உதயம் பெற்று
மாசற்ற புதுவாழ்வு மலர வேண்டும்!

இனபேதம் பார்க்கின்ற இழிவி யல்பு
இதயத்தை விட்டோடிப் போக வேண்டும்!
மனத்துள்ளொன் றைவைத்துப் புறத்திலொன்று
மொழிகின்ற குணமழிந்து சாகவேண்டும்!
தினசரியும் உயிர்களைவீ ணுயழிக்கும்
தீமையினைக் களைந்தன்பைப் புனைதல் வேண்டும்:
கனவான சமாதான விருட்சம் நாட்டில்
காய்த் தேகனி களுமீன்று செழிக்க வேண்டும்!

## இவனுக்கு என்று உணர்வு வரும்?

பல்லுடைக்கும் சொல்லெடுத்துத் தன் பிள்ளைக்கு
பாவியிவன் பெயர் சூட்டி மகிழுகின்றான்
சொல்லுங்கள் ''டிலுாஷா''வாம் ஜெதர்ஷன், டெக்ஷி
சோட்டியாம் சூட்டியாம்! நாய்க்குட்டீயா?
வெல்லம்போல் தமிழென்று வியந்தேயிந்த
மேதினியில் எல்லோரும் புகழும் போது
கல்லாதவள் போலக் கசக்கும் காயைக்
கனியென்றே இவன் தலையில் சுமக்கின்றானே!

படிப்படியாய் இத்தமிழன் உணர்வை யெல்லாம்
பாழாக்கி விட்டானே! தெருக்கள் தோறும்
நடிக்கின்றான்! வெள்ளையனைப் போலும்! வேறு
நாட்டானைக் காட்டானைப் போலவெல்லாம்
துடிப்பின்றித் தூங்கியதால் தானே யின்று
சுதந்திரத்தை இழந்து துடிதுடிப்ப தெல்லாம்
விடிவுதனைக் காண்பதற்கு முயலும் வேளை
வீணனுக்கு ஏனின்னும் அடிமைப் புத்தி?

ஒற்றுமையைத் தொலைத்தேதான் உருக்குலைந்தான்
உரிமையினை இழந்தடிமை நிலையடைந்தான்
வெற்றுரையால் காலத்தை வீணடித்து
வீரத்தை மாற்றார்க்கு அடகு வைத்தான்
உற்''சவத்தில்'' பண்டிகையில் ஊரார் மெச்ச
உதவாத சடங்குகளில் பொருள் கரைத்தான்
அற்புதமாய் நற்றமிழே சிதைந்து போகும்
அவலத்தில் கூட இவன் மகிழ்கின்றானே!

'' நிலாதமிழின்தாசன் ''
நிலாவெளி - 3

## நிலைமை நிலைக்குமோ?

ஈ. ஏ. லக்ஸ்மன்

தந்தை செய்த பாவம் - இது
தாய் சுமந்த பாரம்
தனித்து விட்ட மழலையிடம்
சிரிக்கு தம்மா காலம் - இது
இயற்கை தந்ததில்லை - இருவர்
இணைப்பி லுதித்த தொல்லை!

கன்றுக்குப் புல் தேடி
ஈன்ற பசு வைப்பதில்லை
காக்கையும் கூடு கட்டிச்
சீதனமாய்க் கொடுப்பதில்லை
யாக்கை நிலை வளர்ந்துவிட்ட
மனிதர் வாழ்க்கை கண்டு
காக்கை பசு சிரிக்குதம்மா
பகுத்தறிவை நினைக்குதம்மா!

பூவினில் தேன் சுரக்கும்
தனக்கென்று ஒளிப்பதில்லை
பூமியில் விளையுஞ் செல்வம்
புதையலாய் மறைவதில்லை
உறவில்லா இதயமிங்கு
ஊஞ்சலாடும் துயரங்கண்டு
புதுமையுள்ளம் திகைக்குதம்மா
புரியாமல் தவிக்குதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரட்சணிய யாத்திரிகம்

# ஆத்தும விகாரி செய்யும் விண்ணப்பம்

- த. யுவராஜன், B. A. (Cey.) -



திட்டி வாயிலை அடைவதற்காகப் புறப்படுவதைப் பார்த்து எவரேனும், ''தன்னை இழிபுலையன் என்று எண்ணினாலுஞ் சரி, எள்ளி நகையாடினாலுஞ் சரி அவையெல்லாம் கடவுள் சித்தம்'' என்று தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டு, மனதிலே உள்ள பாவ இருள் நீங்கும்படி செய்பவனும் ஆன்ம ஞானத்துக்குக் காரணமானவனுமாகிய இறைவனை மாத்திரம் மனதினிலே நினைத்த வண்ணம், விண்ணக வாழ்வைத் தருகின்ற அந்தத் திட்டி வாயிலை அடைந்து ஆத்தும விகாரி அங்கு செய்யும் விண்ணப்பத்தைத் தொகுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாவத்திலே உழன்று திரிந்த ஆத்தும விகாரி, பரிவு கொண்ட இறைவனின் பாதத்திலே கிடந்து அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று எண்ணி, மோட்ச வாயில் என்று சொல்லப்படும் திட்டி வாயிலைத் திறக்கக்கோரும் ஆத்தும விகாரியின் விண்ணப்பம், மனதை உருக்கிக் கண்ணீரை வரச்செய்யும் அளவுக்கு நம்மைக் கொண்டுவந்து விடுகின்றதெனலாம்.

திட்டி வாயிலைத் திறக்கக்கோரும் ஆத்தும விகாரி தன்னை இழிந்துரைத்து, உண்மையைச் சொல்லியே விண்ணப்பஞ் செய்கின்றான்.

உள்ளத்தின் கண்ணே கிளர்ச்சியை உண்டாக்கும் இந்தத் திட்டிவாயிற் கதவு தனக்குத் திறந்து வழிவிடுமோ என்று அவன் ஐயங் கொள்கின்றான். அவனின் ஐயமும் நியாயமானதே. ஏனெனில் ஆசையை முற்றாகத் துறந்தவருக்கும் உணவு முதலியவற்றை ஒறுத்தவருக்கும் மட்டுமல்லவா இவ்வாயில் திறக்கும்! என்னைப் போன்றவருக்கு இது கை கூடுமோ? என்று அவன் சிந்திக்கின்றான். இவனின் இச்சிந்தனை, மோட்ச வாயிலை அடைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமாகத் தேவைப்படுஞ் சிந்தனைதான்.

பொய் நிறைந்த உலகத்தில் இருந்து விடுபட்டு நான் வந்திருக்கின்றேன் இறைவா! அன்பும் தூய்மையுங் கொண்ட இறைவனே உன் அடிமையாக வந்திருக்கின்றேன். ஆகையினால் இந்தக் கிளர்பொன் கபாடத்தைத் திறப்பாயே என்று அவன் கேட்கின்றான்.

மாயமான இந்த உலகத்தின் தொடர்பை அறுத்துக்கொண்டு, எல்லையில்லாக் கருணையை அள்ளி வழங்கி என்னைக் காத்தருளிய தூய்மையான இறைவனே! உன்னுடைய அழகிய திருப்பாதங்களுக்கு நான் அடிமை. எனவே, ஆண்டவா! இக்கதவைத் திறப்பாயே என்று உளமுருகிக் கேட்பதைப் பின்வரும் பாடல் காட்டுகின்றது.

''மாய வுலக மயக்கறுத்து
வரையாக் கிருபை தந்தளித்த
தூய பெருமான் திருவடிக்குத்
தொழும்பன் கபாடந் திறமினோ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த உலகத்தைப் பாவக்காடு என்று அறியாமலே உழன்று திரிந்த பாவி நான். ஆசாபாசம் நிறைந்த உலகிலே அகப்பட்டு அலைந்தலைந்து பாவியானேன். அழிவுக்கிடமான இவ்வுலகத்தைத் துறந்து வந்த நாயேன். பாவம் செய்வதற்கும் அஞ்சவில்லை; ஒருவருக்கும் நன்மை செய்ய எண்ணவுமில்லை. இப்படியாக எல்லா வகையிலும் நான் பொல்லாதவன்தான், என்றாலும் உன்னருள் வேண்டி வந்திருக்கின்றேன். ஆகவே, ஐயனே இந்தக் கதவைத் திறப்பாயாக.

இங்கு அவன் எதையும் மறைக்கவில்லை; பொய் சொல்லவில்லை. தான்விட்ட பிழைகளை உணர்ந்து உண்மையாகவே பாவமன்னிப்புக் கேட்கின்றான். இத்தன்மையை மேலும் நோக்கலாம். இவ்வாறு கேட்கும் பாங்கு அதிகாரங் கலந்த மாதிரி இருக்கின்றதாயினும் அவ்வாறில்லையெனக் கொள்வதே பொருந்தும். ஏனெனில் இறைவனிடத்தில் அவன் கொண்ட அன்பு கலந்த உரிமையும்; அத்தோடு பாவக் காடான உலகுக்கு விடைகொடுத்துப் பேரின்பப் பெருவாழ்வை அடையத் துடிக்கும் அவசரமும், குழந்தைத் தனமுமே காரணமெனலாம்.

இறைவா! நான் வேதங் கற்கவில்லை; ஆனால், ''நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்: அப்பொழுது பிழைப்பீர்கள்'' என்று கருணையுடன் நீ கூறிய வார்த்தைகள் கேட்டு வந்துள்ளேன். இப்படிப்பட்ட எனக்காகக் கதவைத் திறக்கமாட்டாயா?

ஒருகாலும் தீராத பசியும் தாகமும் முற்றாக இல்லாமற் செய்யும் வண்ணம் திருவருள் பாலித்து உலகைக் காப்பவனே! அதிலும் ஏற்றத்தாழ்வின்றி மாசில்லாக் கருணை காட்டும் இறையோனே! உன்னைத் தேடி வந்துள்ளேன் என்று சொல்லியதோடு நின்றுவிடவில்லை. அவன் மேலுந் தொடர்கின்றான்.

பாவக்காடான இந்த உலகில் பாவத்தோடு பாவமாக வருந்திப் பாவச் சுமையை இனிமேலும் சுமக்க முடியாமல் உன்னைத்தேடி வந்துள்ள எனக்கு உன் கருணை வேண்டும் ஐயனே. அதுவே எனக்கு இப்போது தேவையானது. நீதிபதியாகிய ஆண்டவனே! தீய வழியில் நின்று தப்பிப் பிழைத்து வந்துள்ளேன். இப்படி வந்தமைக்கான காரணத்தைப் பின்வரும் பாடல் நன்கு எடுத்தோதுகின்றது.

> ''சேரும் மாகொடிய தீவினைத்திரள்
> சுமந்து இளைத்து அளிகொள் ஜீவநல்
> தாரு நீழலில் ஒதுங்கி உய்யவரு
> தமியன் யான் கதவு திறமினோ''

என்றால் இனியும் பாவத்திலே உழன்று கொண்டிருக்க முடியாது. ''மா தயாபரன் அடித் தொழும்பு செய வந்த பாவி'' என்று சொல்லிக் கதவைத் திறக்கும்படி கெஞ்சுகின்றான்.

''குமர நாயக அடியருக்கு அடியன் ஆக வந்து......'' என்று சொல்வதிலிருந்து அவன் மேலும் தன்னைத் தாழ்த்திக் கொள்கின்றான் என்பதை அறிய முடிகின்றது. காரணம் விண்ணக வாழ்வின் பெருமைதான்.

கொடியரிற் கொடியனும் புலையரிற் புலையவனுமாவேன். ஆனாலும் உன் அடியாருக்கு அடியனாய் வந்துள்ளேன். யாவற்றுக்கும் நீயே நிருபன். பாவிகளை இரட்சிப்பதற்காக உன்னையே நீ சிலுவையிற் பலி கொடுத்தவன். அப்படியாக யாவருக்கும் அடைக்கலமாக விளங்குபவன். இறைவனே! எனக்கு நீ அடைக்கலம் தரமாட்டாயா என்று இரந்து கேட்கின்றான். இவ்வாறு திட்டி வாயிலைத் திறக்கக் கோரி ஆத்தும விகாரி செய்யும் விண்ணப்பம் இதுவே. இவனின் நெஞ்சுருக்கும் விண்ணப்பத்தால் கிளர்பொன் கபாடம் திறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய அதிர்வுகள்

## -நக்கீரன்-

□ ஓரிரு தசாப்தங்களுக்கு முன் நாட்டுக் கூத்துக்கள் பற்றிய ஆய்வுகள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் போன்றவர்களால் மேற்கொள்ளப் பட்டன. இதனால் பலரும் அத் துறை பற்றி அறியக் கூடியதாக இருந்ததோடு ஓரிரு நாட்டுக் கூத்துக்களுக்கும் நூல்வடிவம் கொடுக்கப் பட்டது. பின்னர் அத்துறை நோக்கிய நாட்டம் மிக மிகக் குறைந்து நாட்டின் அமைதியின்மை காரணமாக அருகியே விட்டது.

எனினும் சில மாதங்களுக்கு முன் யாழ் பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் மிக்க ''காத்தவராயன்'' நாட்டுக்கூத்துப் பிரதியை கலாநிதி இ. பாலசுந்தரம் அவர் தம்பெருமுயற்சியினால் நூலாக்கியிருக்கிறார். பல தமிழ்க் காப்பிய நூல்களின் ஏட்டுச் சுவடிகள் அழிந்து போனதாக ஆய்வாளர்கள் கவலை தெரிவித்திருக்கின்ற நிலையில் எமது அரும் பெரும் பொக்கிசங்களான நாட்டுப் பாடல்கள் நாட்டுக் கூத்துக்களை அழிய விடுதல் கூடாது.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரியத்தின் உயிர் நாடி நாட்டுக் கூத்துக்களாகும். எனவே அப்பிரதேச நாட்டுப்புறக் கலைகள் பற்றிய பரந்தளவிலான ஆய்வுகள் மிக மிக அவசியம். பல நூல்களை வெளியிட்டும் ஈழத்து இலக்கியத் துறைக்கு கௌரவம் கொடுத்தும் வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்கள் நாட்டுக் கூத்து நூல்களை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கலாநிதிகள் சி. மௌனகுரு, இ. பாலசுந்தரம் போன்றோரும் மட்டக்களப்புப் பிரதேச நாட்டுப்புறக் கலைகளைக் காப்பாற்ற ஏதாவது செய்தேயாகவேண்டும். ஏனெனில் அவர்களுக்கு செஞ்சோற்றுக் கடன் இருக்கிறது.

□ தமிழின் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களை முன் வைப்பவர்களில் கலாநிதி ஆ. சுந்தையாவும் குறிப்பிடத் தக்கவர். தமிழின் எழுத்துச் சீர்திருத்தப் பிரயோகம் பற்றிய நூலொன்றைக் கலாநிதி ஆ. கந்தையா அவர்கள் வெளியிட்டதாக அறிகிறோம். அந்த நூல் பிரமுகர் மட்ட விநியோகத்துடன் நின்று விட்டதாகத் தெரிகிறது. மிகவும் பயன் மிக்க அந்த நூலை சாதாரண வாசகர்களும் சுவைக்க வழிசெய்யப்படுதல் காலத்தின் தேவையாகும்.

□ உமா வரதராஜன் புதிய தலைமுறை எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்கவர். குறைவாக எழுதினாலும் காத்திரமாக எழுதுபவர் உமாவரதராஜன். ''உள்மனயாத்திரை'' எனும் இவரின் சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளிவந்திருக்கிறது. வியூகம் வெளியீடாக வந்திருக்கும் இத் தொகுதியின் விலை ஜீரணிக்க முடியாதிருக்கிறது. இத் தொகுதி எமது பார்வைக்கு இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததும் அது பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வோம்.

□ நிறைய எழுதுவதில் சாதனை படைக்க விரும்புபவர் செ. குணரத்தினம். (உள்ளடக்கம் பற்றிக் கவலைப்படாமல்) ''நாலுவரிக் கவிதையாவது எழுதாதவர்கள் கவிதை பற்றி விமர்சிக்க தகுதியற்றவர்கள்'' என்ற அடிப்படையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். அப்படியாயின் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர்கூட கவிதையை விமர்சிக்கும் தகுதியற்றவர்களா?

★

---


★ **திருடன் தண்டிக்கப் படுவதில்லை, திருடும்போது பிடிபடுகிறவனே தண்டிக்கப் படுவான்.**

- பிரெஞ்சுப் பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியத்தின் பார்வையில் இன்றைய உலகில் கிறிஸ்தவனின் மீட்புப் பணி



இன்றைய மனிதச் சமூகம், வளர்ச்சியின் பற்பல வேதனைகளினாற் துடித்துக் கொண்டிருக்கின்றது. அதன் அனுபவங்களும் வாழ்க்கைச் சூழல்களும், இரு முரண்பட்ட துருவங்களுக்கிடையே பரந்தும் பல தரப்பட்டவையாயும் உள்ளன. உலக வளத்தின் எண்பது சதவிகிதம் 20./· விகிதமானோரின் வீடுகளுக்குள், மிகுதி எண்பது விகிதமானோர் பணக்காரனின் பந்தியிலிருந்து தவறிச் சிதறி விழும் அந்த எஞ்சியுள்ள இருபது விகிதத்தில் எனக்கா உனக்கா என்று போட்டி.

வளர்ச்சி பெற்ற நாடுகளில் நாய்களுக்கும், வீட்டு மிருகங்களுக்கும் கூடப் புட்டிகளில் அடைத்த சத்துணவு. வளர்முகநாடுகளில், படைப்பிற்கெல்லாம் அதிபதியான மனிதன் அடிப்படைச் சத்துணவு தானும் இன்றி நடமாடும் எலும்புக் கூடாகக் காட்சி தரும் அவலம்.

சுதந்திரத்தினதும் இறைமையினதும் சுகபோகங்களைச் சுகித்துக்கொண்டு கட்டாக்காலி மாடுகள்போல ஊரையும் உலகையும் பவனிவரும் கொடுத்து வைத்த சிலர் ஒருபுறம். சமூக அரசியல் உளவியல் ஆன்மீகச் சங்கிலிகளால் மேனியெங்கும் பிணிக்கப்பட்டு அடிமைத்தளையின் அகோரத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவித்தல்லலுறுவோர் மறுபுறம். அன்று யூதர்கள் பபிலோன் ஆறுகளருகே அமர்ந்திருந்து ஜெருசலேமின் திசை நோக்கி மண்டியிட்டுக்கதறியதுபோலேஇன்று எண்ணிறந்தோர் சுதந்திரமும் சுபீட்சமும் மங்கலாக - கானல் நீர்போல தூரத்தே தெரியும் திசைநோக்கி அரற்றுகின்றனர்.

ஒற்றுமை, ஐக்கியம், ஒருமைப்பாடு என்று எத்தனைஆயிரம் சுலோகங்கள், புத்தகங்கள், கருத்தரங்குகள், கருதுகோள்கள்! சமூகத்தொடர்புச் சாதனங்களாலும், நவீனப் போக்குவரத்தினாலும், பொருளாதாரப் பரிமாற்றங்களினாலும் இன்று மிகவும் குறுகியது எனக்காட்டப்படும உலகம், உண்மையில் சடக்கமுடியாத பிளவுகளையும் இணைக்க முடியாத வேற்றுமைகளையும், முரண்பட்ட மனப்பாங்குகளையும் புரையோடிய வெடிப்புகளையும் ஒட்ட முடியாத பிரிவினைகளையும் கொண்டுள்ளது.

மனித சமூகம் வளருகின்றது அது தனக்கென ஒரு வழியை நிர்ணயம் செய்து கொண்டுள்ளது. அது தன் சௌகரியத்துக்காக ஆக்கிய அபிவிருத்தி என்னும் கொள்கை ஆக்கிரமித்து அழிக்கும் ஆபத்து மலைபோல மருட்டுகின்றது. அபிவிருத்தி என்பது ஒரு கொள்கை மட்டுமல்ல அது ஒரு போதை என்னும் நிலை உருவாகி விட்டது.

இன்று ஸ்திரமான கொள்கைகளையும் இலட்சியங்களையும் விழுமியங்களையும் பற்றிக் கூறமுடியாது சூழலுக்கேற்ற கொள்கைகள், சந்தர்ப்பங்களுக்கேற்ற இலட்சியங்கள், வாய்ப்புகளுக்கேற்ற விழுமியங்கள் என்று மனிதன் ஆடைகளைப்போலவே கொள்கைகளையும் இலடசியங்களையும் மாற்றி மாற்றி வாழப் பழகிக்கொண்டான்.

கலாச்சாரப் பின்னணிகளும் ஆன்மீகக் கோட்பாடுகளும் எத்தனையோ இடங்களில் முரண்பட்டும் வேறுபட்டும் இருக்சின்றன. இம் முரண்பாடுகளுக்கிடைசிக்குண்டு கிடக்கும் நவீன மனிதன் இன்னும் இணைக்க முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாத கூறுகளைத் தனக்கு முன் வைத்துக் கொண்டு அவற்றைப்பார்த்து மலங்க மலங்க விழிக்கின்றான்.

வளர்ச்சி என்பது இயல்பாகவே சோதனைகள், பரிசீலனைகள், தகர்ப்புகள், அழித்தல்கள், உருவாக்கல்கள் முதலியன கொண்ட ஒரு தொடர் அனுபவம். அந்த அனுபவம் விசுவாசத்தினால் ஒளிர்விக்கப்பட்டால் மட்டுமே அவனது முக்திக்கும் முழு வளர்ச்சிக்கும் அது அவனை இட்டுச் செல்லும். மனிதன் படைப்பின் அதிபதியாக வேண்டுமேயன்றி அதன் அடிமையாக மாறிவிடக்கூடாது. ஏனெனில் அதுதான் பாவம். அதுவே படைப்பின் ஒழுங்கு விதிகளைக் குழப்பி உலகில் அநீதிகளையும் அக்கிரமங்களையும் ஆபத்தையும் தோற்றுவிப்பது.

இறைமகன் யேசு உயிர்ப்பின் மூலம் பௌதீக - உளவியல் வரையறைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு வாழ்வை அடைந்தது போல, அவரில் விசுவாசம் கொண்டு அவரது உயிர்ப்பில் பங்கு கொள்பவன், இறையரசு என்னும் தெய்வீகச் சூழலுக்குள் அடியெடுத்து வைக்கிறான். அன்பினாலும் அமைதியினாலும் மட்டுமே வரையறுக்கப்படும், ஆளப்படும் அச் சூழலே அல்லது சமூகமே இறையரசு எனப்படும்.

இந்த இறையரசு என்பது மந்திரக்காரன் அந்தரத்திலிருந்து தந்திரமாக எடுத்துத் தரும் மாங்காய் போல அல்ல, அதாவது உலகின் முடிவில் திடீரென ஆகாயத்திலிருந்து வரப்போகும் மாயமாளிகை அல்ல. இறைமகன் யேசு மொழிந்ததுபோல மனிதனுக்கு உள்ளேயும் வெளியேயும் படிப்படியாகக் கட்டியெழுப்பப்படும் ஒரு தெய்வீகச் சூழல்.

| | | | |
|---|---|---|---|
| மனிதனுக்கு | உள்ளே | அது | மனப்பாங்கு |
| ,, | வெளியே | ,, | நற்சூழ்நிலை |
| ,, | உள்ளே | ,, | விசுவாசம் |
| ,, | வெளியே | ,, | நல்லொழுக்கம் |
| ,, | உள்ளே | ,, | மன்றாட்டு |
| ,, | வெளியே | ,, | நற்செயல் |

எனவேதான் வழிபாடும் செபங்களும் அவை முக்கியமானவை, மூலதனமானவை இன்றியமையாதவை என்றாலும் கூட, அவை போதுமானவை அல்ல. யேசுவின் உலக மீட்புப் பணியிற் அவரது சீடன் பங்கு கொள்ளல் வேண்டும், அவரது இரட்சணிய யாத்திரையின் பாதையிற் சிலுவை சுமந்து நடத்தல் வேண்டும்.

தன்னையொறுத்து, தன்னலம் மறந்து, தன் புகழ் தேடாது தன்னுயர்வு நோக்காது சேவை செய்தல் வேண்டும்.

- தன் சொல்லினால், தான் வாழும் சமூகத்தை உருவாக்கும் உப்பாக
- தன் செயலினால் அதனை உயர்விக்கும் ஒளியாக
- தன் போதனையால் அதனை நெறிப்படுத்தும் புளிக்காரமாக
- தன் சாதனையால் தன் சமூகத்துக்குத் தக்க முன்மாதிரிகையாய் உயர்ந்து நிற்கும் பர்வதப்பட்டணமாகக் கிறிஸ்துவின் சீடன் திகழ வேண்டும்.

" ஆண்டவரே, ஆண்டவரே " என்று வெறுமனே நாமஜெபம் செய்வோர் எல்லாம் அவர் அடிசேரார்.

வானுறைத் தந்தையின் திருவுளப்படி நடப்போரே அவர் மலரடி சேர்வார். கிறிஸ்தவர் இன்றேல் மோட்சத்தில் இடங்கள் காலி என்பதல்ல. கற்களைக்கொண்டே அபிரகாமுக்கு மக்களை உண்டாக்கக் கூடிய கடவுள், பாவிகளையும், பதிதர்களையும், அஞ்ஞானிகளையும் கொண்டே பரலோகத்தை நிறைத்து விடுவார்.

" தகுதியினால் அல்ல - கிருபையினாலேயே நாம் இறைவனாற் தெரிந்து கொள்ளப்பட்டோம்". எனவே அளவற்ற அன்பு நிறைந்த அக்கிருபையை நினைந்தே அவர் ஆணையைச் சிரமேற் கொண்டு அவர் அரசைக் கட்டியெழுப்ப நாளும் பாடுபடும் நற்சீடர்களாய் வாழ்வோம். □

### ★ இரண்டு சந்தர்ப்பம்.

நமக்கு அநேக சந்தர்ப்பங்களில் கோபம் வருகிறது; முக்கியமாக இரண்டு விதங்களில் கோபம் வருகிறது. ஒருவன் ஒரு தப்புக்காரியம் செய்தால் அவனிடம் கோபம் ஏற்படுகிறது. அல்லது ஒருவன் நம்மைத் தூஷித்தால் அவனிடம் கோபம் வருகிறது. யோசித்துப் பார்த்தால் இந்த இரண்டு விதங்களிலும் எவரிடமும் கோபம் கொள்வதற்கு நமக்கு யோக்கியதை இல்லை என்று தெரியும்.

தொகுப்பு : கௌசிகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 4

அருளப்பு மாஸ்டர் உயரமானவர். பிரகாசமான கண்கள். சந்தோஷமான முகம். இந்த வேலைக்கு மிகவும் பொருத்தமானவர். இடையில் மேரியைக் கண்டவுடன்,

''ஹலோ மேரி, எப்பிடிப் படிப்புகள் போகுது?'' என்றார்.முதுகில் பல பார்வைகள் பொருள் பொதியத் துளைப்பது போல் அந்தக் கேள்வி.

''இல்லை அந்தக் 'கொன்சல்ரன்ற் சேஜனை'ப் பற்றி அண்டைக்குச் சொன்னீங்கள்... அதுதான் கதைச்சனுங்க...'. என்றபடி வந்தமர்ந்தான் அண்ணு.

''ஓ...ஐ...சி... அதுதானே நானும் சொல்ல வந்தனுன். பாட்லக் ரு மேரி... அவருக்கு வேறை ஒரு இடத்திலை டக்கெண்டு றெஜிஸ்ரேசன் முடிஞ்சுது. பரவாயில்லை. இன்னும் எத்தினை மாப்பிளையள் இருக்கினம். வீ வில் றை...... ஐ வில் றை மை பெஸ்ற்...''

என்று வேகமாய்ச் சொல்லிக்கொண்டு வந்த அருளப்பு மாஸ்டரின் குரலில் நம்பிக்கைச் சிறகுகளை எப்போதும் இழந்துவிடாத தன்மை பீரிட்டது.

''ஆண்டவரே, அருளப்பு மாஸ்டர் நினைக்கிறபடி எதுவும்நடந்திடக்குடாது'' என்று தனக்குள் பிரார்த்தித்துக் கொண்டாள் உள்ளேயிருந்த மேரி.

அருளப்பு மாஸ்டர் 'விறு விறு என்று' ஆங்கிலமும் தமிழும் கலந்துபேசும் முறையில் எப்போதும் ஒரு அழகு இருக்கும். அந்தப் பேச்சு முறையே அவரது சிறந்த ஆயுதம்.

வேகமாய்ப் பேசிக்கொண்டு வந்தவர் திடீரென்று நிறுத்தி ''மேரி... எனக்கு ஒண்டும் வேண்டாம். ஜஸ்ட் ஏ கிளாஸ் ஓஃப் பிளெயின் வாட்டர் பிளீஸ்...'' என்று உள்நோக்கிக் குரல் கொடுத்தார்.

''கொன்சல்ரன்ற் சேஜனுக்கு'' றெஜிஸ்ரேசன் முடிந்த விடயம் மேரியைப் பொறுத்தவரை பெருத்த நிம்மதியைத் தந்தது. தனக்கு அவசரமாக யாரையும் பார்க்க முனையவேண்டாம் என்று அருளப்பு மாஸ்டரிடம் கூறிவிடலாம் என நினைத்தாள். ஆனால், அண்ணு இல்லாத நேரமாகப் பார்த்துச் சொல்லவேண்டும்.

இடம். தின்பண்டங்கள், செபமாலை படக் கடைகள், மணிக்கடைகள், மெழுகுதிரிக் கடைகள் என்று ஒரே நெருக்கடியாக இருக்கும். வீட்டில் எல்லாரும் கோயிலடிக்குப் போய்விட்ட நேரம் அருளப்பு மாஸ்டர் வந்தார். மேரி மட்டும் வீட்டில் இருந்து படித்துக்கொண்டிருந்தாள்.

'கேற்'றைத் திறந்து நேராக உள்ளுக்கு வந்தவர் மேரி படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு,

''சொறி ரு 'டிஸ்ரோப்' யூ... அண்ணு எங்கே?'' என்று கேட்டார்.

''எல்லாரும் கோயிலுக்குப் போட்டினம்... அன்னம்மாள் கோயிலுக்கு...'' என்று சிரித்தாள் இவள்.

''உமக்குக் கோயிலுக்குப் போறது விருப்பமில்லையா?''




அப்படி ஒரு சந்தர்ப்பம் இரண்டு மூன்று நாட்களின் பின் கிடைத்தது. அன்னம்மாள் கோயிலில் ஆறும் கிழமைத் திருவிழா. மக்கள் பல திசைகளிலுமிருந்து வந்து பெருந்தொகையாகக் கூடுகிற

என்று கேட்டுக்கொண்டே திரும்ப முயன்றவரை மேரி மறித்தாள்.

''கொஞ்சம் இருங்கோ... உங்களோடை கதைக்க வேணும்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொடர்கதை

''என்னுடையோ? இந்தக் கிழவனுடையோ?'' என்று சிரித்தபடி கதிரையில் வந்து அமர்ந்தார் அவர்.

மேரி புத்தகத்தை மூடி வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

''நீர் ஏன் கோயிலுக்குப் போகேல்லை? யேசு ஜீவிக்கிறதிலை உமக்கு நம்பிக்கை இல்லையோ?'' என்று மீண்டும் கேட்டார் அவர்.

''நான் யேசு காட்டின பாதையிலை வாழ விரும்பிறன். எனக்கு யாரும் ஒரு கன்னத்திலை அடிச்சா, மற்றக் கன்னத்தைக்காட்ட நான் ஆயத்தம். ஆனா... எனக்குக் 'கிறவுட்' இருக்கிற இடத்திலைதான் 'இன்பெக்ஷன்ஸ்' பிடிக்கிறது. ரூ மச் ஒஃப் காபன்டை ஒக்சைட்...''

அருளப்பு மாஸ்டர் கேட்டுக்கொண்டேயிருக்க அவள் தொடர்ந்து சொன்னாள்.

''என்ரை ஃபிறெண்ட் ஒராள் பெரதெனியா ஃபக்கல்ரியிலை மெடிக்கல் ஸ்ருடன்ற். போன வருஷம் பெரகரா கிறவுட்டுக்கை போயிட்டு வந்து படுத்தவ. சம் வைறஸ் இன்ஃபெக்ஷன் ஒஃப் த லங்ஸ்... ஆள் உயிரோடை எழும்பவேயில்லை...''

அருளப்பு மாஸ்டர் பேப்பர் பார்த்துக்கொண்டே அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''எங்கடை கம்பஸிலும் சில பேர் இருக்கினம்... கோயில் பயித்தியங்கள். எனக்கு விருப்பமில்லை...''

என்று சொல்லும்போது மேரிக்குத் தன்னை ஒரு முறை கிருப்ஸ் நல்லூருக்கு வரும்படி கேட்டது நினைவு வந்தது. இவள் 'நீங்கள் மெடிக்கல் ஸ்ருடன்ற். யூ மஸ்ற் பீ மோர் சயன்ரிஃபிக்... கிறவுட் இருக்கிற நாட்களிலை எனக்கு எந்தக் கோயிலுக்கும் போக விருப்பமில்லை...''

என்றுகூறி மறுத்துவிட்டாள். ஆனால் அவன் ஒருவேளை தான் இந்துக் கோயிலுக்கு வர விரும்பவில்லை என்று நினைத்திருப்பான். போகலாம். போய் இந்தக் கோயிலில் வழிபாட்டு முறைகள் எப்படி இருக்கின்றன என்று அறிந்து கொள்ள மேரிக்கு விருப்பம். ஆனால் அவன் அதன் பிறகு கேட்கவேயில்லை.

தானும் கிருப்ஸ் உம் இப்படிச் சில அடிப்படை விடயங்களில் வேற்றுமைப்படுதலே தான் கிருப்ஸ்க்குச் சாதகமான பதிலைச் சொல்லமுடியாமல் இருப்பதற்குக் காரணமோ என்று நினைத்தாள். அல்லது தனது உள்மனம் ஒரு 'இந்து'வைத் திருமணம் செய்ய விரும்பவில்லையோ? அல்லது ஏதோ யோசனையில் ஆழ்ந்து சிறிது நேரம் மேரி பேசாமல் இருந்ததைக் கவனித்த அருளப்பு மாஸ்டர் பேப்பரை மூடி வைத்துவிட்டு ''சொல்லி முடிஞ்சுதா?'' என்று கேட்டார்.

''நீங்கள் பேப்பர் படிக்கிறீங்கள். நான் சொல்றதைக் கேட்கயில்லை...'' என்று சிணுங்கிப் பொய்க்கோபம் காட்டினாள் அவள்.

''இல்லை. நீர் சொன்னதையெல்லாம் நான் வடிவாக் கேட்டுக்கொண்டுதான் இருந்தனான். என்ன சொல்றதுக்கு என்னை மறிச்சனீர்?''

''இல்லை... அண்ணா இல்லாத நேரம் சொல்லவேணும் எண்டு நினைச்சனான். எனக்கு நீங்கள் அவசரமா யாரையும் ஃபிக்ஸ் பண்ண வேண்டாம். அண்ணா போகிற வரைக்கும் சும்மா முயற்சி செய்யிற மாதிரி நடிச்சாக் காணும்...''

''அடி சக்கை... ஏன் உமக்கு யுனிவேசிற்றியிலை ஏதும் இருக்கே? அப்ப ஏன் இவ்வளவு நாளும் சொல்லாமல் இருக்கிறீர்?'' என்று உசாரானார் அவர்.

அவளுக்குள் ஒரு குளிர்ச் சிலிர்ப்பு ஓடியது. தன் நிலையை எப்படிப் புரியவைப்பது என்று புரியவில்லை.

மீண்டும் தனக்குள்ளாகக் கிருப்ஸ் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ஒருநாள் மினி பஸ்ஸில் இவள் இருக்கும்போது எங்கோ இடைவெளியில் ஏறினான் கிருப்ஸ். இவளுக்கு அருகில் 'சீற்' வெறுமையாக இருந்தது. அவன் ஓடிவந்து அதில் அமர்ந்துகொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவன் அவள்மீது உரசிக் கொள்ளாமல் நாகரிகமாகவே இருந்து கதைத்தானுயினும் அவனது அந்தச் செயல் அவளுக்குப் பிடிக்கவில்லை.

நன்ருகக் குடிக்கிருன் - சிகரெட்தான்! மற்றது இடைக்கிடை. படிப்பதை வாழ்வில் பிரயோகிக்கத் தெரியாதவன் அல்லது விரும்பாதவன் என்பதே இவளுக்கு அவன் பற்றிய கணிப்பு.

''ஹீ இஸ் நொற் சயன்ரிஃபிக்...''

''மற்றது ரூ மச் ஓஃ ரோக்கிங்''. நெடுகக் கதைப்பது இவளுக்குப் பிடிக்காதது. ஆனுலும் ஏனே கிருப்ஸை நினைக்கப் பாவமாகவும் இருக்கிறது.

''நீ விரும்பிற இடத்தை விட உன்னை விரும்பிற இடம் நல்லதடி'' என்று நளினி அடிக்கடி சொல்கிருள்.

இதையெல்லாம் மனதில் நினைத்துக்கொண்டே ''இல்லை அங்கிள்... அப்பிடி ஒண்டுமில்லை... எண்டாலும் இப்ப என்ன அவசரம்?'' என்ருள் அவள்.

அவர் ஏதோ புரிந்துகொண்டவர் போலச் சிரித்துக்கொண்டே எழுந்து சென்ருர்.

☐ ☐ ☐

அந்தியும் சந்தியும் கூடுகிற வேளை ஒன்று! பிரபஞ்ச மேனியில் நட்சத்திரப் பூக்கள் புத்தாடைபோட முயலுகின்றன.

நூல் நிலையத்துக்குக் கிழக்குப்புறம் அமைந்த பெரிய விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகள் நடைபெறுகின்றன.

மைதானத்துக்கு முன்னே வீதியின் மறுபுறம் அமைந்த போராளிகள் பாசறையிலும் பயிற்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

மேரிக்கும் விளையாட்டுக்களில் விருப்பம் உண்டு. அதிலே நின்று பயிற்சி பெறுகிருள்.

நீளம் பாய்தலுக்காக அன்று அவள் பெற்ற பயிற்சி மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருக்கிறது. 'கிருப்ஸ்' குறுந்தூர ஓட்டங்களின் ஆரம்பத்திற்கான பயிற்சியைப் பயிற்சியாளரிடமிருந்து பெற்றுக்கொள்கிருன்.

பல மாணவர்கள் நின்று பல்வேறு விளையாட்டுக்களையும் பயிற்சி பெறும் இடத்தில் இவ்வளவு நேரமும் காணப்படாத 'கிறிஸ்ரோபர்' - பயிற்சி முடியும் நேரத்தில்... மாலை ஏழு மணியளவில் அங்கு தோன்றுகிருன்.

''பூச்சி வந்திட்டுது... பூச்சி வந்திட்டுது'' என்று பல மாணவர்கள் கத்துகிருர்கள். சிலர் சீழ்க்காய் அடிக்கிருர்கள். அவன் அதுபற்றிச் சற்றும் அக்கறைப்படாதவன் போல் சிரித்துக்கொள்கிருன்.

சிரிக்கும்போது முகத்தில் பால் வடிகிறது. சந்தோஷமான முகம். மற்றைய மாணவர்களின் கேலியினுல் வெட்கப்பட்டுச் சிவந்திருக்கிறது. சுருண்ட கேசம். மெல்லிய உடல். தன்னைக் கேலி செய்த யாரையும் அவன் நேருக்கு நேர் பார்க்கவில்லை. எப்போதுமே யாரையும் கண்ணுக்குள் பார்த்துக் கதைக்கக் கிறிஸ்ரோபரால் முடியாது. பெண்களோடு துப்பரவாகக் கதைக்கமாட்டான்.

''இவ்வளவு நேரமும் றூமிலை இருந்து நல்லாக் 'கிருஸ்ப்' பண்ணிப்போட்டு, இப்ப பாடமாக்கினதை நினைச்சுப் பார்த்துக்கொண்டு இஞ்சை வந்து நிக்கிருன்...'' என்ருன் ஒருவன்.

பயிற்சி முடிந்து, உடுப்பை மாற்றிக்கொண்டு மைதானத்திற்கு வந்த மேரி, எப்படி நளினியின் றூமிற்குப் போவதென்று நினைத்துப் பார்த்துக்கொண்டு தெருவிற்கு வந்தாள்.

''என்ன மிஸ்... தனியப் போறீங்கள்...?''

திரும்பிப் பார்த்தாள்.

கிறிஸ்ரோபர்!

பெண்களோடு ஒரு நாளும் கதைக்காத கிறிஸ்ரோபர்!

(தொடரும்)

## பாவேந்தரின் திறமை

தனது கையெழுத்துப்படியில் மை சிந்திவிட்விட்டால் அல்லது எழுத்தில் பிழை ஏற்பட்டுவிட்டால் அதை ஓர் ஓவியமாக மாற்றி விடுவார் பாவேந்தர் பாரதிதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீடியோக் கலாச்சாரம்

எமது நாட்டுக்குத் தொலைக்காட்சி வந்தபின் அதைத் தொடர்ந்து வீடியோ டெக்குகளும், வீடியோ கசட்டுக்களும் இறக்குமதியானபின் இவை எமது சமூகத்தில், குடும்பத்தில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. நாளும் பொழுதும் 'விஸ்வரூபம்' எடுத்து வளர்ந்து வரும் இத்தகைய சாதனங்களையிட்டு நாம் விழிப்போடு இருப்பது அவசியம். கடந்த மே மாதம் 9ம் திகதி வெளியான வீரகேசரி நாளிதழில் வீடியோ கலாச்சாரம் என்னும் தலைப்பில் 'புதினப்பிரியன்' எழுதியிருந்த கட்டுரை சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. இதைத் 'தொண்டன்' வாசகர்களுக்காக இங்கே மறு பிரசுரம் செய்கிறோம்.

இ. ஆ.

புத்தாண்டு தினத்தன்று (13 - 4 - 88) இந்திய தூரதர்ஷனில் 'மலரும் நினைவுகள்' என்றதோர் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. அதில் ''இதயம் பேசுகிறது'' மணியனைப் பேட்டி கண்டிருந்தார்கள். தூரதர்ஷன் சார்பில் நடிகர் நாகேஷும் பத்திரிகையாளர் லேனா தமிழ்வாணனும் எழுத்தாளர் சிவசங்கரியும், மாறி மாறி மணியனிடம் உரையாடி அவருடைய அனுபவங்களைப் பேச வைத்தார்கள். இதில் பேட்டியின் முடிவில் இடம்பெற்ற நிகழ்ச்சி தான் எடுத்தாளும் விஷயத்துக்குக் கருவாகியது. திரு. மணியன் அவர்கள் தற்போது இந்திய ஆலயங்களை வீடியோ கசெட்டுக்களில் படமாக்கிக் கொண்டிருக்கிறார். எவ்வளவுக்கு யாதார்த்தமாக அதனைச் செய்ய முடியுமோ அவ்வளவுச்கு முயற்சிக்கின்றார்.

டெலிவிஷனும், வீடியோ டெக்கும், வீடியோ கசெட்டும் வந்தவுடன் சினிமாத் தியேட்டர்களுக்கு மவுசு குறைந்து போயிற்று. முழு நீளத் திரையில் பார்த்தால் தான் முழுமையான திருப்தி ஏற்படும் என்று நினைக்கிற சில பிடிவாத சினிமா ரசிகர்களைத் தவிர மற்றவர்கள் வீட்டின் அமைதியில் திரைப் படங்களை ரசித்துப் பார்க்கிறார்கள். தியேட்டர் வீட்டுக்குள் வந்துள்ளது. வீடியோ டெக் உள்ள வீடுகள் எல்லாம் ஒரு தியேட்டர் போலத்தான்.

இது போலவே மணியன், வழிபடும் கோயில்களை வீடியோ கசெட்டுக்குள் அடக்க முயற்சிப்பதால் தியேட்டருக்குப் போவோர் தொகை குறைவது போல் ஆலயங்களுக்குப் போவோர் தொகையும் குறையுமோ தெரியாது?

வீடியோ வந்தாலும் வந்தது; பிள்ளைகளின் படிப்பு மண்ணுச்சு என்று புலம்பும் பெற்றோர் பலர் உள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாணம் போன்றஇடங்களில்கார்னிவல் பொழுது போக்குகளிலோ விளையாட்டுப் போன்ற ஓய்வு நேர நடவடிக்கைகளிலோ ஈடுபட வசதியற்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு மிஞ்சியிருப்பது டெலிவிஷனும், வீடியோ படமும், ரேடியோவும்தான். அவர்கள் ஒரே நேரத்தில் மூன்று மணி நேரத்தை வீடியோ டெலிவிஷன் பெட்டிக்கு முன்னால் வீணடிப்பதைக்காணும் போது ''ரத்தக் கண்ணீர்'' விடும் பெற்றோர் பலர் உண்டு.

வாழ்க்கையில் பொழுது போக்கு அவசியம் தான் ஆனால் பொழுது போக்கே வாழ்க்கையாகிவிட்டால்............ எம். ஜீ. ஆரின் '' தூங்கதே தம்பி தூங்காதே '' பாட்டுத் தான் அடிக்கடி நினைவுக்கு வருகிறது. வீடியோ பொழுதுபோக்கினால் எத்தனை இளைஞர்கள் வாழ்க்கையில் ''கோட்டை'' விடப் போகிறார்கள் என்ற அச்சமும் கவலையும் முதியவர்களுக்கு ஏற்பட்டால் அதில் ஆச்சரியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

லண்டனில், பாரிசில் ஒன்ராறியோவில் சிட்னியில் இப்படியே உலகின் பல இடங்க ளில் நடைபெறும் திருமணங்களும் அது போலவே இங்கே நடைபெறும் திருமணங் களும் வீடியோக் கசெட்டுக்களில் பதிவு செய் யப்பட்டு அங்கும் இங்குமாகப் பரிமாறிக் காண்பிக்கப்படுகின்றன. இதனைத் ''வீடியோ திருமணம்'' என்றே அழைக்கலாம். நேரடி யாக மணப்பெண்ணும், மாப்பிள்ளையும் இல் லாத விடத்து வீடியோ கசெட்டை வைத் துக்கொண்டே பெற்றோரும், உற்றோரும் திருமண வைபவங்களை அவற்றுக்குரிய முழு தான சடங்குகள் சம்பிரதாயங்களுடன் நடத்தி முடிப்பது இன்றைய எமது வாழ் வின் பகுதியாகியுள்ளது.

திரைப்படங்கள் மட்டுமா வீடியோ கசெட்டுக்கள் மூலம் கண்டு களிக்கப்படுகின் றன?

வீடியோ கசெட் திருமணங்களுடன் நின் றுவிடவில்லை. மரணச் சடங்குகள் கூட இன்று வீடியோ கசெட்டுகளில் பதிவு செய் யப்பட்டு விமானங்களில் பறந்து உலக வலம் வருகின்றன. பெற்றோரை, உறவினரைப் பார்க்க வரமுடியாத நிலையில் இருக்கும் எமது மக்கள் தமது ஆறுதலுக்காக வீடி யோப் படங்களைப் பார்க்கின்றார்கள்.

திருமணங்களிலும் வைபவங்களிலும் மர ணச் சடங்குகளிலும் வீடியோப் படம் எடுப் பதால் அந்த நிகழ்ச்சிகளே வீடியோவுக்கென முடுக்கிவிடப்பட்ட விஷயங்களாக மாறுவ தென்னவோ உண்மைதான். இவற்றை வீடி யோப் படம் ஆக்கிரமித்து விடுகிறது. இத னால் எம்மவரின் சமூக நிகழ்ச்சிகளில் புதிய தோர் செயற்கைத் தன்மை வந்து விடுகின்றது.

வீடியோக் கலாச்சாரம் நிலைத்து நிற்கப் போகும் ஒரு விஷயமா? அப்படியாயின் அத னுடன் வாழ நாம் பழகிக்கொள்ள வேண் டும் இன்றேல் அது எம்மை விழுங்கிவிடும்.

---

☐ உன்னைப்பற்றிய புள்ளி விபரம் கணக் கெடுக்கப்படும்போது எத்தனை வீடு கட்டினாய் என்ற கணக்கு எடுக்கப்படுவதில்லை. எவ்வளவு செய்தாய் என்பதே ஏட்டுக்கு வருகிறது.

தொகுப்பு: கௌசிகன்.

# சிகரெட் பிடிப்பதை நிறுத்துவது எப்படி ?

★ சிகரெட் பிடிப்பதைக் குறைக்க எண்ணுப வர்கள் தாம் வழக்கமாகப் பிடிக்கும் சிக ரெட்டை வாங்காமல், வேறு பிரான்ட் சிகரெட்டை மாற்றினால் அதிகமாகப் பிடிக்கத் தோன்றாது.

★ சிகரெட்டுக்களை பாக்கெட்டில் வாங்கக் கூடாது. ஒவ்வொன்றாக வாங்கிப் பிடிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் கடை யைத் தேடிப்போய் சிகரெட் வாங்க வேண்டும் என்பதால் சிகரெட் பிடிப்பது தன்னால் குறையும்.

★ சிகரெட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளாமல் தொலைவில் வைத்துவிட வேண்டும். சிகரெட் பிடிக்கும் நேரம் வந்தால் கூட ''இன்னும் கொஞ்சநேரம் பொறுத்துப் பிடிக்கலாம்'' என்று மேலும் கொஞ்ச நேரத்தைக் கடத்த வேண்டும்.

★ காலையில் எழுந்ததும் ஒரு டம்ளர் தண்ணீரோ, எலுமிச்சம் பழச்சாறோ பருகினால் காலையில் எழுந்ததும் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் குறையும்.

★ சிகரெட் பிடிப்பதை விட்டுவிட்டதாகவோ குறைத்துக் கொண்டதாகவோ, உங்கள் நண்பர்களிடம் வாய்விட்டு அடிக்கடி சொல்லுங்கள். இதனால் சிகரெட்டைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று தோன்றும். மற்றவர்கள் முன் பிடிக்கும் வழக்கம் மறையும்.

★ அடிக்கடி வாக்கிங் போக வேண்டும். மூச்சை நன்றாக இழுத்து வெட்ட வெளி யில் சுவாசிக்க வேண்டும். காப்பி அல் லது தேநீர் பருகுகிறவர்கள் அதற்குப் பதில் பழ ஜூஸ் சாப்பிடலாம். சாப் பிட்டதும் சிகரெட் பற்றவைக்கத் தோன்றாது.

★ சிகரெட்டை விட நினைப்பவர்கள் பசி யுடன் இருக்கக்கூடாது. பசி எடுக்கும் போது கொஞ்சமாக ஏதாவது டிபன் சாப்பிடலாம். சிகரெட் பிடிப்பதற்குப் பதில் சொக்லேட், பெப்பர்மின்ட், வேர்க் கடலை, உலர்ந்த பழங்கள், மென்தோல் கலந்த காரமான மிட்டாய்களை வாங்கி வைத்துக்கொண்டு அடிக்கடி சாப்பிட சிகரெட் பிடிக்கத் தோன்றாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## இளைஞர் அரங்கம்

# உள்மன யாத்திரை

**31**வயதுகள் நிரம்பிய, பாண்டிருப்பு, உமா வரதராஜன் வெளியிட்டுள்ள சிறு கதைத் தொகுதியின் பெயர்தான் "உள் மன யாத்திரை"

கடந்த ஆனித்திங்கள் 26ஆம் நாள் காலை, கல்முனை உவெஸ்லி - நல்லதம்பி மண்டபத்தில் "உள்மன யாத்திரை" வெளியிடப்பட்டது.

பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியிலும், கலை வாழ்வில் ஈடுபாடு கொண்டிருந்த இளைஞர் உமா வரதராஜன் தமது வாழ்வில் அனுபவித்ததை, உய்த்துணர்ந்ததை எழுத்தில் சிறு, சிறு சம்பவங்களாக ( கதைகளாக ) வடித்துள்ளார். தனித்துவமான முறையில், உமா வரதராஜன், உமா வரதராஜனாகவே இருந்து எழுதியுள்ளார். தமது 15 வயதிலிருந்தே எழுதத் தொடங்கிய உமா வரதராஜன் கவிதைகள், கட்டுரைகள் வழியாக தமது எண்ணங்களை - ஏக்கங்களை வெளியிட்டவர். இன்று ஒரு தனிப் புத்தகத்தின் மூலம், தமிழகத்தில் தலைசிறந்த "அன்னம்" அச்சகத்தாரின் பதிப்புரிமையுடன் வெளியிட்டுள்ளார் "உள்மன யாத்திரையை".

உளநிலை — சூழ்நிலை
அகப்பார்வை — புறப்பார்வை
அகவுலகம் — புறவுலகம்

ஆகிய கருவூலங்களுக்கு தமது அனுபவங்கள் - உணர்வுகளை அப்படி, அப்படியே கூறியிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

ஆனால், அவரது "உள்மன யாத்திரை" நூல் வெளியீட்டின்போது இடம்பெற்ற "விமர்சனங்கள்" உச்ச நிலையை அடைவதிலிருந்து விலகிச் சென்று கொண்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆரம்ப விமர்சகர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து பின்னைய விமர்சனங்கள் உச்ச நிலையை பெற்றுக் கொடுப்பதிலிருந்து பின்னடைவு கொள்ளத் தொடங்கின.

கூர்மையான விமர்சகர்கள், உயரிய படைப்பு, வளமான பிரசன்னம் இருந்தும் முறையான ஒரு விமர்சன அரங்குகளை இன்னும் அனுபவிக்க முடியாதிருப்பது பெரும் குறைபாடாகும்.

விமர்சனத்திற்கான நேரக் கட்டுப்பாடு காரணமா?
விமர்சனத்திற்கான காலம் (வேளை) காரணமா?
கேட்போர் ஈடுபாடு கொள்ளாதது காரணமா?

என, அமைப்பாளர்கள் மீளவும் சீர் தூக்கிப் பார்த்தால் நல்லது. விமர்சனம் பற்றி நோக்கும்போது,

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்" என்றார் வள்ளுவர். விமர்சனம் - மதிப்பீடு செய்யும்போது பின்வரும் அம்சங்கள் வாயிலாக நோக்கவேண்டும்.

- ☐ கலைஞன் — படைப்பாளன்
- ☐ கரு — படைப்பு
- ☐ நுகர்வோன் — சுவைப்பவர்கள்

இதில் சுவைப்பவர்கள் மீது படைப்பாளன் - படைப்பு ஏற்படுத்தும் விளைவுகளும் - தாக்கங்களுமே பிரதானமான மதிப்பீட்டிற்கும் - விமர்சனத்திற்கும் உரியன என்பதை, விமர்சிப்போர் நினைவிற் கொள்ள வேண்டுமென்பது நான் கற்றறிந்த ஓர் உண்மை என்பதையும் முன் வைத்து - விமர்சகர்கள் தமது சொந்த விருப்பு - வெறுப்புக்களை - தனிப்பட்ட மனச்சார்புகளைக் களைந்து விமர்சிக்க வேண்டுமெனவும் அன்புக்குரல் கொடுப்பது.

**- கலையுலகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பாரதியின் அரசியல் பார்வை

க. யோகநாதன் B. A. (Hons)

**த**மிழர் சமூக வாழ்வில் பாரதி என்ற நாமம் ஓர் பிரமாண்டமான சமூகப் பெறுமானம். பாரதி; அவன் ஓர் இலக்கியவாதி, அவன் ஓர் அரசியல்வாதி, அவன் ஒரு மெஞ்ஞானி, அவன் ஒரு சமூகச் சிந்தனையாளன். பாரதியின் பன்முகப் பரிமாணங்கள் இவை. பாரதிக்கு நூற்றாண்டும் கொண்டாடி முடித்து விட்டோம். ஆயினும் பாரதியின் உண்மைப் பெறுமானங்களை எந்த அளவிற்கு நாம் இனம் கண்டுள்ளோம்?

பாரதி பற்றிய பல ஆய்வுகள் தமது சொந்தக் கருத்துக்களுக்கு பாரதியை சாக் காக்கிக்கொண்ட ஆய்வுகளாகவே உள்ளன. பாரதியின் சாதனைகளை இனம் கண்டு காட்டும் செய்திகள் மிகமிகச் சிலவே. பாரதி உயிருடன் இருந்தபொழுது அவனை ஒதுக்கி அழிக்க முயன்றவர்கள் தமிழர்கள். பாரதி இறந்ததும் அநாதைப் பிணமாகத்தான் புதைக்கப்பட்டான். இன்று பாரதிக்கு எத்தனை வாழ்த்தொலிகள், புகழ் கூச்சல்கள். இந்தப் பேரிரைச்சல்களுக்குள் பாரதியின் உண்மைக் குரல் ஒலியை அமுக்கிவிட முயன்று கொண்டு இருப்பவர்களும் நாம் தான். ஆயினும் பாரதி தோற்கடிக்கப்படமுடியாதவன். முறுக்கிவிடப்பட்ட மீசையும், ஆண்மைக் கம்பீரமும் பாரதியின் தோற்றத்திற்கு மட்டும் அல்ல அவனுடைய சிந்தனைகளுக்கும் உண்டு.

பாரதி பன்முகப்பாடு கொண்ட சிந்தனையாளன் என்பது உண்மை. ஆயினும் அடிப்படையில் அவன் ஓர் அரசியல்வாதி என்றே கூறவேண்டும். பாரதியின் அரசியல் ஈடுபாடும், அரசியலில் அவன் கொண்டிருந்த பார்வையுமே அவன் ஈடுபட்ட ஏனைய துறைச் சிந்தனைகளிலும் செல்வாக்குச் செலுத்தின எனலாம். நம்மில் பலருக்கு பாரதி என்றதும் அவன் ஒரு கவிஞன் என்பதற்கு மேல் எந்த மனப்பதிவுகளும் உருவாகுவதில்லை என்றே கூறவேண்டும். ஆனால் நிஜத்தில் பாரதி ஓர் அரசியல்வாதி என்பதே முதலில் வைத்து நோக்கவேண்டிய ஒன்றாகும். இது விடயமாக பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தமது 'இரு மகா கவிகள்' எனும் நூலில் கூறும் ஒரு கருத்து மனங்கொள்ளத்தக்கது. ''அரசியல் களத்தில் நின்றுகொண்டு தற்செயலாக இலக்கிய நிழலில் ஒதுங்கினார் பாரதி'' - எனக் கூறுவார் கைலாசபதி. இவ்வகையில் இச்சிறு கட்டுரை பாரதியின் அரசியல் பார்வை எவ்வாறு இருந்தது என்பதை வாசகர்களுக்கு இனம்காட்டும் ஒரு முயற்சியாக அமையும்.

''தமிழா! உன் வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன; உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதீக நடை - எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்துவிட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் எப்போதும் நேர்மையிருக்கவேண்டும். உண்மையிருக்கவேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்கவேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயர். உண்மை சாஸ்திரங்களுக்கு எல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்'' இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன் தமிழனை பார்த்து பாரதி கூறியவை இவை. இன்றைக்கு கூறுவதுபோல் இருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

றது. இதுவே பாரதியின் இதயம், இந்த உண்மையில் இருந்துதான் பாரதியின் அரசியல் சிந்தனைகள் அரும்புகின்றன.

முதலில் பாரதி அரசியலை எவ்வாறு நோக்கினான் என்பதை அறிதல் அவசியம். 'ஞானரதம்' என்ற பாரதியின் உரைச் சித்திரத்தில் தர்மலோகக் காட்சியில் ஒரு சைத்திரியனுக்கு (அரசியலாளனுக்கு) இருக்க வேண்டிய கடமையை பாரதி பின்வருமாறு கூறுகின்றான். ''அதர்மங்கள் ரத்த பீஜமுடையவை. கொல்லக்கொல்ல மென்மேலும் பிறந்துகொண்டே இருக்கும். சைத்திரியனுடைய கடமையாதென்றால் அவற்றைத் தன் உயிருள்ளவரை வெட்டித் தள்ளிக்கொண்டேயிருக்க வேண்டும்'' ஆக, பாரதி அரசியலை ஒரு தர்மக் கைங்கரியமாக நோக்கினான். அதர்மத்தை அழிக்கும் போராக நோக்கினான்.

பாரதி அரசியலில் எப்பொழுதும் பொது ஜனங்களுக்கே முதன்மை அளித்தான்.

''இந்தியாவின் ஜனங்கள் எத்தனையோ அயர்ச்சி கொண்டவர்களாகவும், பிரிவு பட்டவர்களாகவும், ஒழுங்கறியாதவர்களாகவும் இருப்பதாகவும் ஸ்ரீ கோகலே குறை கூறுகின்றார். இதை வாஸ்தவமென்றே வைத்துக் கொள்வோம். அதன் பேரில் உண்மையான தேச பக்தர்கள் செய்யவேண்டிய கடமையென்ன? இந்த ஜனப் பெருங்கூட்டத்தாருக்கு விழிப்புண்டாக்கி, இவர்களை ஒழுங்குபடுத்தி இவர்களுக்குள்ளே இருக்கும் பிரிவுகளை நீக்கி பலங்கொடுக்க முயலவேண்டுவதே கடமையாகும்''.

''இருளடைந்து பலவகைத் துன்பங்களில் ஆழ்ந்து கிடக்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு இக் காங்கிரஸ் இன்னதெனவும், அதில் அவர்களுக்கு உரிமையுண்டெனவும் நன்றாய் விளக்கி அந்தந்த நாட்டு பாஷையில் மாதந்தோறும் எடுத்துப் பேசியுள்ள அவ்விஷயங்களை அவர்கள் முன்வைத்து அவர்களைக் கண் விழித்துப் பார்க்கும்படி செய்யவேண்டும்''.

மேலே பாரதியிடம் இருந்து எடுத்துக் காட்டப்பட்ட இரு மேற்கோள்களையும் கொண்டு நோக்கும்பொழுது அரசியலில் பாரதி பொது மக்களின் பங்காற்றலுக்கு முதன்மை அளித்துள்ளார் என்பது தெளிவாகுகின்றது. அரசியல் என்பது ஒருசில புருஷர்களின் காரியம் அல்ல என்பதே பாரதியின் கருத்தாகும்.

பாரதி தமிழ் அபிமானம் மிக்கவர். தமிழ் நாட்டில் தமிழிலேயே கல்வி அமைய வேண்டும் என அன்றே வாதிட்டவர். ஆயினும் தனது தமிழ் உணர்வை இந்தியத் தேசிய உணர்விற்கு எதிராக அவர் முன்நிறுத்தவில்லை'' இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்லுவதால், டாக்டர் நாயரைத் தலைமையாகக்கொண்ட திராவிடக் கட்சியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்யபாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்துவிடலாகாது'' என்றார்.

பாரதி தனது இனத்தை, மொழியை, மதத்தை நேசித்தது போலவே பிறரின் இனத்தை, மொழியை, மதத்தை நேசித்த தாராளவாதியாகக் காணப்படுகின்றார். குறிப்பாக இந்திய இஸ்லாமியரைப்பற்றி பாரதி கூறிய கருத்து இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

''மகமதியர்கள் தங்கள் நாட்டைவிட்டு இதையே சுயநாடாக எப்பொழுது அடைந்தார்களோ அன்றுமுதல் அவர்களுக்கும் நமக்கும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது... பாரத மாதாவின் வயிற்றில் பிறந்த சகோதரர் என நமக்குள் சிறு சச்சரவுகளை

## கண்டுபிடிப்பு

நெப்போலியன் ரஷ்யப் படையெடுப்பில் தோல்வி கண்டு பின்வாங்கியபோது பொன்னும் வெள்ளியும் விலைமதிப்பற்ற கலைப் பொருட்களும் அடங்கிய அவனுடைய பிரத்தியேக புகைவண்டித் தொடர் ரஷ்ய மண்ணிலேயே காணாமல் போய்விட்டது. சமீபத்தில் மாஸ்கோ நகருக்கு அருகில் இருக்கும் பெரிய ஏரி ஒன்றில் சில பொருட்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த ஏரியின் தண்ணீரிலும் தங்கமும் வெள்ளியும் ஏராளமாக இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிஞ்சித்தேனும் நினையாமல் நமது நாட்டில் தோன்றி நமது நன்மைக்குப் பாடுபட்ட மகான்களை எல்லோரும் ஒன்றுசேர்ந்து பூஜிப்பதே நமது கடமை. இதை நாமெல்லோரும் நமது மகமதிய சகோதரர்களுக்கு காரியத்திற்காட்ட அக்பர் போன்ற மகமதிய மகான்களின் உற்சவத்தைக் கொண்டாடவேண்டும். அதனால்தான் அவர்களுக்கு முழு நம்பிக்கையும் ஏற்படும். ஆகையால் நம்நாட்டவரனைவரையும் இதை ஆழ்ந்து யோசித்து, நமது அக்பர் சக்கரவர்த்தியின் உற்சவத்தையும் கொண்டாடுவர் என நம்புகிறோம்''.

மேலே காட்டப்பட்ட பாரதியின் வாசகங்கள் பாரதியின் தாராள மனித நேயத்தை மட்டும் இன்றி ஒரு நாட்டின் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரிடத்து எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

பாரதியார் 'இந்திய தேசிய விடுதலை' என்ற அரசியல் களத்தில் நின்றே தன் அரசியல் செயற்பாட்டுச் சிந்தனைகளை ஆக்கினாலும் உலக மகான்களுக்கே உரிய மேதாவிலாசத்துடன் தன் பார்வையைச் செலுத்திய ஒருவராகவே காணப்படுகின்றார். இந்திய மரபில் வந்த அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களில் ஒன்

**இம்மாதம் 11ம் திகதி பாரதி நினைவு தினம். அதையொட்டிவரும் சிறப்புக் கட்டுரை**

றாகிய அறத்திற்கு அவர் கொடுக்கும் விளக்கம் பாரதியிடம் இருந்த சர்வதேசிய பரிமாணத்தைப் பறைசாற்றுகின்றது. அவர் கூறுவார் ''அறமாவது கடமை, அது உனக்கும், உனது சுற்றத்தாருக்கும் பிறர்க்கும் நீ செலுத்தவேண்டிய கடமை. பிறர் என்பதனுள் வையகம் முழுவதும் அடங்கும். கடமையில் தவறலாகாது''

இதில் பாரதி ஒரு மனிதனின் கடமையை தேசிய எல்லைகளையும் தாண்டி அவனி முழுமைக்கும் பொதுவில் வைக்கின்றார்.

பாரதி பாரததேச சுதந்திரத்திற்காகப் போராடியபொழுது வறட்டுச் சித்தாந்தவாதியாகவோ அல்லது நடைமுறைக்கு ஒவ்வாத முரட்டுப் பிடியாளராகவோ இருக்கவில்லை. உதாரணமாக திலகருக்கும் பாரதிக்கும் இருந்த உறவை எடுத்துக்காட்டலாம்.

திலகர் இந்திய தேசிய காங்கிரசை தீவிரவாத வழியில் வழிநடாத்திச் சென்றவர். திலகர் தீவிர தேசியவாதியாக இருந்த பொழுதிலும் சாதி பேதம், பெண்ணடிமை முறை ஆகியவற்றிற்கு சார்பாளராய் இருந்தவர் ஆயின் பாரதி தீவிர சாதி எதிர்ப்பாளன், பெண்ணடிமை முறையை பூரணமாக எதிர்த்தவர். இருப்பினும் பிரித்தானியருக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவர் திலகர் போன்றோருடன் ஓர் உடன்பாடு காணவே விரும்பினார். இதுபற்றி பாரதி பின்வருமாறு கூறுவார்.

''விதவைகளுக்கு விவாகம் செய்யவேண்டும். சர்வஜாதியரும் ஒன்றாய் கலந்துவிடவேண்டும், என்பதுபோன்ற கொள்கைகளுடைய ஆசார திருத்தல் கட்சியிலே திலகர் தம்மால் சேரமுடியாது என்கிறபோதிலும் திலகரது கல்வியும், ஜனாபிமானமும், தேச பக்தியும், மனோதிடமும் வரம்பு கடந்தனவாகும். ஆதலால் திலகர் ராஜதந்திர விஷயங்களில் வழிகாட்ட உரிமை பெற்றவர்'' - என திலகர் பற்றிப் பாரதி கூறுவார்.

ஒரு சமூகத்தில் பல முரண்பாடுகள் நிலவும் பட்சத்தில் பொது எதிரிக்கு எதிரான முரண்பாட்டை பிரதானமாகக் கொண்டு அம்முரண்பாட்டிற்கு எதிராக ஐக்கியப்படுத்தக்கூடிய அனைத்துச் சக்திகளையும் அணி திரட்டும் தீர்க்கதரிசனமான அரசியல் அணுகுமுறையொன்று பாரதியிடம் இருந்துள்ளதை அவரின் திலகர் தொடர்பான அணுகுமுறை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

இந்தியத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தீவிரவாதிகளாய் இருந்த திலகர் குழுவினரின் ஆதரவாளனாய் இருந்த பாரதி பிரித்தானியருக்கு எதிரான சகல சக்திகளையும் ஓரணியில் திரட்டவேண்டும் என்ற வகையில் காந்தியையும் தேச விடுதலைத் தலைவராக அங்கீகரித்தார். ஆயின் எல்லாச் சந்தர்ப்பத்திலும் காந்தியை அவர் அங்கீகரித்தார் எனக் கூறமுடியாது. திலகரைப் போன்றே காந்தியும் விதவை திருமண விவகாரத்தில் பூரணமாகப்பெண்ணுரிமையின் பக்கம் நிற்கவில்லை. இந்த விடயத்தில் காந்தியின் கருத்தை எதிர்த்து பாரதி தனது பத்திரிகையில் எழுதினார். மேலும் காந்தியின் அகிம்சை பற்றியும் பாரதிக்கு முரண்பாடு இருந்தது. இதுபற்றி பாரதி ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு கூறினார். ''ஸ்ரீமான் காந்தி நல்ல மனுஷர். அவர் சொல்லுகிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சத்ய விரதம், அஹிம்சை, உடமை மறுத்தல், பயமின்மை - இந்த நான்கும் உத்தம தர்மங்கள். இவற்றை எல்லோரும் இயன்ற வரை பழகவேண்டும். ஆனல் ஒருவன் என்னை அடிக்கும்போது நான் அவனைத் திரும்பி அடிக்கக்கூடாது என்று சொல்லுதல் பிழை''

மேலே காட்டிய பாரதியின் வாசகங்கள் அரசியலில் பலாத்காரத்தை பாரதி அங்கீகரித்து இருந்தார் என்பதையே காட்டுகின்றது. சிலர் பாரதி தனது இறுதிக் காலத்தில் பலாத்காரத்தில் நம்பிக்கை அற்று இருந்தார் எனக் கூறுவர். ஆயின் இவ்வாறு கூறுவோர் கூற்று ஆதார பலம் அற்றது.

பாரதி ''எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் இனம்'' என்ற சுதந்திர, சமத்துவ சமுதாயம் ஒன்றை பாரத தேசத்தில் பார்க்கத் துடித்தவர். தான் காண விளைந்த அச்சமூகத்தை பாரதி'' கிருதயுகம் என்றே அழைத்தார். பாரதி தனது ஏனைய சிந்தனைகளைப்போல் அரசியல் சிந்தனைகளையும் பாரத தேசத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தில் இருந்தே உருக்கொடுக்க முனைந்தார். அவர் காண விளைந்த 'கிருதயுகம்' என்ற பெயரே இதற்குச் சான்று. ஆயின் பழமைகளை அப்படியே பாதுகாக்க விரும்பியவர் அல்ல பாரதி. தனது பாரம்பரியத்தை புதிய நிலமைகளுக்கு ஏற்ப புதுக்கியும் செதுக்கியும் வளர்த்தெடுத்துக்கொண்டு முன்செல்ல விளைந்தவர் பாரதி. தான் நாடிய கிருதயுகத்தை இந்தியா, உலகம் முழுவதிலும் காண்பதற்கு உழைக்கவும், முன்னுதாரணமாக நிற்கவும் வேண்டும் என பாரதி விரும்பினலும் அவை பிறதேசங்களில் உருவானதைக் கண்ணுற்றதும் அவற்றை அவர் வரவேற்ருர்.

''சைனு முன்னிருந்த தூக்கத்தைவிட்டு முன்னமே எழுந்துவிட்டது...... அதனுல் நமது ஆசியாவிற்கு உண்டாகும் பெருமை பெரிதன்றே! கொஞ்சம் கொஞ்சமாய் கீழ் நிலையிலிருந்து ஆசியா விருத்திக்கு வருவது நன்ருய்த் தெரிகிறது. இந்தியாவிலும் அதே ஊக்கம் தயாராகக் கடவுளை வேண்டுகிறேம்'' என சீனவின் எழுச்சிப் போராட்டத்தைக் கண்ட பாரதி, சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்களை கண்ணுற்றதும் பின்வருமாறு எழுதுகிருர். ''ருஷ்யாவில் சோஷலிஸ்ட் கட்சியார் ஏறக்குறைய நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிவிடக் கூடுமென்று தோன்றுகின்றது'' என்ருர்.

இந்தியாவே கிருதயுகத்தை முதலில் காணும் என சங்கற்பம் செய்த பாரதி சீனவிலும், ரஷ்யாவிலும் நிகழ்ந்த போராட்டங்களையும், மாற்றங்களையும் கண்டு அவற்றிலே தாம் பாரத தேசத்தில் காண விழைந்த கிருதயுகத்தை இனம் காணுகின்ருர். பாரதியின் காலத்து இந்தியாவில் வாழ்ந்த எந்தச் சிந்தனையாளர்களுக்கும் இல்லாத ஒரு சிறப்பே பாரதியின் இச்சிறப்பு ஆகும். எவ்வாருயினும் இந்தியா முழு உலகிற்கும் கிருதயுக முன்மாதிரியை அளித்தே தீரும் என்ற நம்பிக்கையுடனேயே பாரதி மரணம் எய்தினர். இதனை அவர் எழுதிய 'பாரத சமுதாயம்' என்ற அவரின் இறுதிக் கவிதையிலும் காணலாம் இப்பாடலில்

''முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை'' எனச்

சங்கநாதம் செய்த பாரதி

''மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ'' என்று கூறு

கின்ருர். மேலும்

''இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி யொருவனுக்குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'' - என்றும்

முழங்குகின்ருர். அதன்பின்,

''எல்லோரும் அமரநிலை எய்தும்
நன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும் - ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் - ஆம்! ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்'' - எனப்

பாரதி இடக்கோடு கூறுகின்ருர். பாரதி இறந்து விட்டான். அவனுடைய அரசியல் பார்வையில் அவன் காண விளைந்த கிருதயுகத்தைப் பாரதம் கண்டதா? உலகிற்கு அது அதனை முன்னுதாரணமாய் நின்று உவந்தளித்ததா? என்பவை கரிசனை மிக்க கேள்விகள். பிரித்தானியரிடம் இருந்து இந்தியா சுதந்திரத்தை இரவில்தான் பெற்றது. இந்தச் சுதந்திரத்தை இரவில் பெற்றதாலோ என்னமோ பாரத தேசத்தில் இன்னும் விடியலே இல்லை. பாரதம் விடியுமா? பாரதியின் கிருதயுகம் அங்கு நிகழுமா?

பாரதியின் கிருதயுகக் கனவு பாரத தேசத்தில் பலிக்கட்டும். பலிக்கும் என நாம் நம்புவோமாக. ஏனெனில் நதிகள் மலையை நோக்கி ஓடுவதில்லை. வரலாறும் அப்படித்தான். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கியச் செய்திகள்

☐ 'தொடுவானம்' கிறிஸ்தவ மாதஇதழின் இரண்டாவது இதழ் '88 வெளிவந்து விட்டது. அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சிறு கதைப் போட்டி முடிவும் இதில் உள்ளது. போட்டியில் கலந்து கொண்ட மொத்தம் 16 சிறு கதைகளில் 8 சிறு கதைகளுக்கு பரிசு கிடைத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

☐ வீரகேசரி அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறு கதைப்போட்டி முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை. உரியவேளையில் முடிவுகள் வெளிவருமா?

☐ நோர்வே தமிழ்ச் சங்கத்தினர் அகில இலங்கை ரீதியில் சிறு கதை, கவிதைப் போட்டிகளை நடாத்தவுள்ளனர். நம்மவர்களும் இதில் கலந்துகொண்டு பரிசுகளைப் பெறுவார்களா?

---

★ மரணத்தின் பின் எங்கே போகப் போகிறோம் என்று நிச்சயமாகத் தெரியும் வரை கடவுள் ஒருவன் இருப்பது உறுதி.

தொகுப்பு: கௌசிகன்.

---

☐ கண்டியிலிருந்து ஒரு தமிழ் சஞ்சிகை ஆனந்த விகடன் பாணியில் மலரப் போகிறது. அதை வாடாமல் பார்த்துக் கொள்வது வாசகர்களின் கையிலேயே தங்கியுள்ளது.

☐ மட்டக்களப்பு / கலாச்சாரப் பேரவையினர் நடாத்த விருந்த 1987ம் ஆண்டுக்கான கலைஞர் கௌரவிப்பும், அவர்களுக்கான பட்டமளிப்பும் கால நிலைகாரணமாகப் பின் போடப்பட்டுள்ளது. காலம் கடந்துபோவதால் பெரிய அளவில் இல்லாது விட்டாலும் சிறிய அளவிலாவது விழாவை நடாத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு பட்டங்களைச் சூட்டுவார்களா?

☐ கொழும்பு / இயல் தமிழ்வளர் மன்றம் நடாத்திய சிறு கதைப் போட்டி முடிவு இன்னும் வெளியாக வில்லை. எப்போது இது வெளிவரும்?

☐ கல்லாற்றில் இருந்து ஓர் இலக்கிய சஞ்சிகை ரவிப்பிரியாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரவுள்ளது. இடைநடுவில் நின்று போகாமல் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

- செ. குணரத்தினம்

---

## வெளியீட்டு விழா

திரு. சு. ஸ்ரீஸ்கந்தராசா எழுதிய 'சந்ததிச் சுவடுகள்' (ஓரங்க நாடகங்கள் ஆறு அடங்கியது) நூல் கடந்த 14.8.1988 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 மணியளவில் மட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. அன்புமணி அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவுக்கு மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் திரு. எஸ். சின்னையா, கலாசார உத்தியோகத்தர், திரு. எஸ். எதிர்மன்ன சிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

---

★ எதையும் சாதிக்க விரும்பும் மனிதனுக்கு 'நிதானம்' தான் அற்புதமான ஆயுதமே தவிர கோபம் அல்ல.

★ நன்மை செய்யாதவனை விட நன்மை செய்வதைத் தடுப்பவனே மிக மோசக்காரன்.

தொகுப்பு: கௌசிகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்களுக்குத் தெரியுமா?

## பல்லிகள்

உலகத்திலேயே மிகப்பெரிய பல்லி இனங்கள் வடகிழக்கு இந்தியாவில் வாழ்கின்றன. இவ்வகைப் பல்லிகள் 35·5 சென்டி மீற்றர் வரை வளரக்கூடியவை. இவை சப்தமிட்டால் 30 மீற்றர் வரை கேட்கும். சிவப்பு, அல்லது ஆரஞ்சு நிறத்தில் உள்ள இப்பல்லிகள் சிறு பூச்சிகளையும், எலிகள், பாம்புகள், பறவைகள் இவற்றையும் இரையாகக் கொள்கின்றன. இவற்றை மக்கள் 'டுகே' என்று அழைக்கிறார்கள்.

## மாஸ்கோ மணி

உலகில் அதிக கனமான மணி ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் உள்ளது. 1733ம் ஆண்டு செய்யப்பட்ட இந்த மணி பயன்படுத்தப்படாததால் லேசாக உடைந்து போனது. இதன் குறுக்களவு 22 அடி. உயரம் 19 அடி. எடை 200 டன்னுக்கு மேல். இதிலிருந்து உடைந்த துண்டு 11 டன் எடை. இந்த மணியை இப்போது உயரமாக எழுப்பப்பட்ட மேடை மீது வைத்து ஒரு சிற்றாலயமாகப் பயன்படுத்துகிறார்கள். உடைந்த பகுதி நுழைவாயிலாக உள்ளது.

## 'ஷா'வின் குறும்புகள்

அழகி ஒருத்தி ஷாவோடு பேசிக்கொண்டிருந்தாள். அவள் அகம்பாவம் பிடித்த ஆணவக்காரி என்பது ஷாவுக்குத் தெரியும்.

மிஸ்டர் ஷா! எனக்கு என்ன வயது இருக்கும் சொல்லுங்களேன் பார்க்கலாம்? என்றாள் கேலியாக.

ஷா பதிலளித்தார்.

உன் உடலைப் பார்த்தால் பதினைந்து வயதிருக்கும் போலிருக்கிறது. உன் பல்லைப் பார்த்தால் பதினெட்டு வயதென்று சொல்லலாம். உன் கூந்தலைக்கண்டால் பத்தொன்பது வயதுக்கு மேலிருக்க முடியாது.

'கடகட' என்று சிரித்துப் பூரித்தாள் அவள்.

"ஆக, மொத்தம் எல்லாம் சேர்த்து உனக்கு 51 வயதைக் காட்டுகிறது" என்றார் ஷா அலட்சியமாக.

பெர்னாட்ஷாவுக்கு மலர்களின் மீது மிகவும் பிரியம் என்று கேள்விப்பட்ட ஒருவர் அவர் வீட்டுக்குச் சென்றார். ஆனால் அங்கு மலர்களையே காணோம். மலர்கள் வைக்கும் அலங்காரச் சாடிகளும் இல்லை. வியப்படைந்த அவர் ஷாவை நோக்கிக் கேட்டார்.

'உங்களுக்கு மலர்கள் மீது மிகுந்த பிரியம் என்றல்லவா கேள்விப்பட்டேன்!'

'ஆமாம் இல்லை என்று யார் சொன்னது? எனக்குக் குழந்தைகள் மீதும்தான் பிரியம். அதற்காக அவர்களின் தலைகளைக் கொய்து என் வீட்டு அலங்கார சாடிகளை அழகு செய்யவேண்டுமென்பதில்லையே!' என்றார் ஷா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# மாணவர்

## அப்போஸ்தலர் பணி - 4.

### கிரேக்க மொழி பேசும் யூதர் - சுதேசிய யூதர்.

**பெந்தகோஸ்து** விழா நிகழ்ச்சியின் போது யூதர்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்தார்கள் என்பதை அறிந்தோம். அவர்கள் தாங்கள் வாழ்ந்த நாடுகளின் மொழியையே பேசினர். அதுதான் அவர்கள் தாய் மொழியாக இருந்தது. ஆயினும் ஒரு சிலர் கிரேக்க மொழி பேசக் கூடியவர்களாகவும் இருந்தனர். இத்தகைய கிரேக்க மொழி பேசும் கிரேக்கரல்லாதவர்களை யவன பண்பாட்டினர் எனவும் அழைத்தனர்.

கிரேக்க மொழிபேசும் யூதர்களுக்கும், எருசலேமில் வாழ்ந்த யூதர்களுக்கும் சில இடைவெளிகள் இருந்தன. இவர்கள் அந்நிய நாடுகளில் குடியேறி வாழ்ந்ததால் பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றிலும் சிறு மாற்றம் ஏற்பட்டிருந்தது. எருசலேமின் மொழியான அரமேய மொழி பேச முடியாதவர்களாக இருந்தனர். தோராவுக்கும் (சட்டம்) அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இது போன்ற காரணங்களினால் எருசலேம் வாழ் யூதர்களுக்கும் இவர்களுக்கும் இயற்கையாகவே பகையுணர்ச்சி இருந்தது. எருசலேம் வாழ் யூதர்கள் இவர்களை இரண்டாந்தர குடிமக்களாக, கீழ்த்தரமானவர்களாக புறக்கணித்தனர்.



இத்தகைய பின்னணியில்தான் நாம் ஆதித்திருச்சபையில் எழுந்த பிரச்சினையினை அணுக வேண்டும், ஆதித்திருச்சபையில் எல்லா வகையினரும் இருந்தனர். அக்காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. எருசலேமில் வாழ்ந்த கிரேக்க மொழி பேசுவோர் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அப்போஸ்தலர்களினால் நடைமுறைப் படுத்தப்பட்ட அறப்பணியிலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்தனர்.

### துணைத் தொண்டர் நியமனம் -

தங்களது பிரச்சினையை அப்போஸ்தலர்களிடம் முறையிட்டனர். பன்னிரு அப்போஸ்தலர்களும் சேர்ந்து இப் பிரச்சினையைத் தீர்க்க முடிவெடுத்தனர். எல்லா வேலைகளையும் அவர்களால் தனித்துச் செய்ய முடியவில்லை. அவர்களுடைய முக்கிய பணி நற்செய்தியை அறிவிப்பது. எனவே, உணவையும் ஏனைய பொருட்களையும் பகிர்ந்து கொடுக்கும் பணிக்காக (அறப்பணிக்காக) ஏழு துணைத் தொண்டர்களை நியமிக்கின்றனர். அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட தகுதிகள் பின்வருமாறு:-

- மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.
- பரிசுத்த ஆவியின் வல்லமை நிரம்பப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
- மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதில் ஞானம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

அவர்களில் அறுவர் கிரேக்க மொழி பேசுகின்றவர்களாகவும், ஒருவர் யூத மதத்தைத் தழுவியவராகவும் இருந்தனர். துணைத் தொண்டர்கள் நியமிக்கப்பட்டதால் அப்போஸ்தலர்கள் தங்கு தடையின்றி நற்செய்தியை அறிவிக்க முடிந்தது. துணைத் தொண்டர்களின் முக்கிய பணி பந்தியில் பணிவிடை செய்வதாக இருந்தாலும் அவர்களும் மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தனர். அவர்கள் வழியாக அற்புதங்களும் அருங்குறிகளும் நடைபெற்றன. அவர்கள் மக்களுக்கு திருமுழுக்கும் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

### முடியப்பர் -

இத்தகைய துணைத் தொண்டர்களில் ஒருவரான முடியப்பர் பேச்சாற்றல் மிக்கவராக இருந்தார். கடவுளின் வல்லமை நிரம்பியவராகவும் இருந்தார். கிரேக்க மொழி பேசுகின்றவர்களுக்கென பல செபக்கூடங்கள்

# பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருந்தன. கிறிஸ்தவத்தைத் தழுவிய யூதர்களும் வழக்கம்போல செபக் கூடங்களுக்குச் சென்று வந்தனர். செபக் கூடங்களுக்குச் சென்ற பொழுதெல்லாம் இயேசுவைப் பற்றியும் பேசினர். ஆரம்பத்தில் யூதர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. இயேசு இறந்து விட்டார்தானே, அவரைப்பற்றி எல்லோரும் மறந்து விடுவர் என யூதர் எண்ணினர். அதனால்தான் கிறிஸ்தவ யூதர்களைச் செபக்கூடங்களில் அனுமதித்தனர்.

## முடியப்பருடன் தர்க்கம் -

முடியப்பரோடு சிலர் தர்க்கம் செய்யக் கிளம்பினர். ஏனெனில் முடியப்பரின் பேச்சு அவர்களுக்கு அபாயகரமான அறிகுறி ஒன்றைக் காட்டியது. யூதமதத்துக்கும் கிறிஸ்தவத்துக்குமிடையே பிளவு ஒன்றை நிறுவினார். அவரது கருத்துக்கள் தோரா, ஆலயம், உடன்படிக்கை இவை யாவும் அவசியமில்லை என்பதைக்கோடிட்டுக்காட்டியதாக உணர்ந்தனர். எனவே அவரைப் பிடித்துத் தலைமைச் சங்கத்துக்கு இழுத்து வந்து பொய்ச்சாட்சிகளை ஏவி விட்டனர்.

## முடியப்பரின் உரை -

முடியப்பர் தலைமைச்சங்கத்தில் விசாரிக்கப்பட்டபொழுது அவர் ஆற்றிய உரை, வெளிப்பார்வைக்கு ஏதோ எபிரேய வரலாற்றை மீண்டும் எடுத்துச் சொல்வதுபோல் தோன்றினாலும் அதன் உட்கருத்து பெரியதொரு பூகம்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது. பாலஸ்தீனாவுக்கு வரமுதலே இறைவன் பிதாப்பிதாக்களோடு தொடர்பு கொண்டார் என்றும், விருத்தசேதனத்தினால் அவர்களைத் தன்னுடைய சொந்த மக்களாக ஆக்கு முன்பே அவர்களைப் பராமரிப்பதென வாக்களித்தார் என்றும், ஆலயம் கட்டப்படு முன்பே அவர்கள் கூடாரங்களில் இறைவனை வழிபாட்டார்கள் என்றும் கூறியதிலிருந்து உடன்படிக்கை, விருத்தசேதனம், ஆலயம் யாவும் அவசியமற்றவை என்பதைக் கூறாமலே உணர்த்தி விடுகின்றார்.

இவையனைத்தும் யூதர்களுக்கு ஆத்திர மூட்டின. மேலும் அவர் பேசிய வார்த்தைகள் கோபத்தை வருவித்தன. ''யூதர்கள் எப்போதும் தங்கள் மீட்பர்களைப் புறக்கணித்தவர்கள்தான். எனவே மோயிசனால் முன்னறிவிக்கப்பட்டவரான இயேசுவையும் கொன்றதில் வியப்பில்லை. சட்டங்கள் புனிதமானவைதான். ஆயினும் யூதர்கள் சட்டங்களைக் கடைப் பிடிக்கவில்லை. யூத இனம் தன் பணியைச்செய்யத் தவறிவிட்டது. எனவே பழைய இஸ்ராயேல் மடிந்து கொண்டிருக்கின்றது. ஏனெனில் புதிய இஸ்ராயேலான கிறிஸ்தவம் உதயமாகிவிட்டது.''

## முடியப்பரின் இறப்பு -

மேலும் அவர்களால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. கூக்குரலிடத் தொடங்கினர். கொல்ல ஆயத்தம் செய்தனர். தன் முடிவு அண்மித்து விட்டதை அறிந்த முடியப்பர். ''இதோ! வானம் திறந்துள்ளதையும், மனுமகன் கடவுளின் வலப்பக்கம் நிற்பதையும் காண்கிறேன்'' என்று கூறியது தான் தாமதம் அவர்மேல் கற்கள் மழையாகப் பொழியத் தொடங்கின. இயேசு கடவுள் என்று சொல்வதற்குச் சமமாக இருந்தன அவரது இறுதி வார்த்தைகள். அதாவது அவர்களுக்கு அது தேவதூஷணமாக இருந்தது.

எவருக்கும் கொலைத் தண்டனை வழங்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கவில்லை. உரோமை ஆளுநனுக்குத்தான் இருந்தது. ஆயினும் அவர்கள் அனைவரும் ஆத்திரம் அடைந்திருந்தாலும், உடனடியாக அவரைக் கொல்ல வேண்டும் என ஒரு மனதாக எண்ணியதாலும் உரோமையர்களைப் பற்றிப் பொருட்படுத்தவில்லை. விசாரணைக்குக் கொண்டு வந்த சாட்சிகளே முதல் கற்களை எறிந்தனர். முடியப்பர் உயிர் விடும்போது இயேசு சொன்ன அதே வார்த்தைகளைக் கூறுகின்றார். இவ்விதமாக முதல் வேதசாட்சியாக முடியப்பர் இறந்தார். சவுல் எனும் இளைஞனிடம்தான் கொலையாளிகள் தங்கள் மேலாடைகளை ஒப்படைத்திருந்தனர். முடியப்பர் கொலைக்குச் சவுல் உடன்பட்டிருந்தார்.

(தொடர்ச்சி 29ம் பக்கம் பார்க்கவும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியப் புதிர் - 4

இயேசுவின் உவமைகளைப் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இதோ ஒரு போட்டி. இயேசு சாதாரண பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் பயன் படுத்தி எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் உவமைகளில் போதித்துள்ளார். கீழே சில சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை எந்த உவமைகளில் வருகின்றன என்பதை நிரப்பி அனுப்புங்கள்.

1. கடைக்காரர் ..............................
2. கைக்குட்டை ..............................
3. நாய்கள் ..............................
4. வாகனம் ..............................
5. மோதிரம் ..............................
6. கோபுரம் ..............................
7. பாறை ..............................
8. பழம் ..............................
9. ஏர் மாடுகள் ..............................
10. அப்பம் ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியப் புதிர் - 2 முடிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மனுசேஸ் | — | சூசை | — | ஆஸ்னேட் |
| 2. | தோபி | — | தொபியாஸ் | — | அன்னுள் |
| 3. | சூசை | — | யாக்கோபு | — | ராக்கேல் |
| 4. | சாமுவேல் | — | எல்கானு | — | அன்னு |
| 5. | ஈசாக் | — | ஆபிரகாம் | — | சாருள் |
| 6. | சாலமோன் | — | தாவீது | — | பெத்சபே |
| 7. | பத்துவேல் | — | நாக்கோர் | — | மெல்காள் |
| 8. | யூதா | — | யாக்கோபு | — | லீயாள் |
| 9. | மோயிசன் | — | அம்ராம் | — | யொக்காபேத் |
| 10. | யாக்கோபு | — | ஈசாக் | — | ரெபேக்காள் |

## பரிசு பெறுவோர் :

1ம் பரிசு:

**A. பிரபாகரன்**
புனித வளன் இளங்குருமடம்
மட்டக்களப்பு.

2ம் பரிசு:

**ஜெரின்டன் ஜோண்சன்**
ஹார்த்து அன்னே ஆலயம்,
திருகோணமலே.

3. **S. ஜுட் அன்ரன்ராஜ்**
ஆலய வீதி,
மூதூர் - 3.

4. **பெனடிக்ற் ஜெயா**
ஹார்த்து அன்னே ஆலயம்,
பாலையூற்று,
திருகோணமலே.

5. **லெயோனு பேணடேற் ஜோண்சன்**
ஹார்த்து அன்னே ஆலயம்,
பாலையூற்று,
திருகோணமலே.

## பாராட்டுப் பெறுவோர்:

1. **திருமதி அந்தோனியம்மா செபமாலே**
மே/பா. பங்குத்தந்தை
ஹார்த்து அன்னே ஆலயம்,
திருகோணமலே.

2. **யோசப் சந்தணம்பிள்ளே**
மே/பா. பங்குத்தந்தை
ஹார்த்து அன்னே ஆலயம்,
திருகோணமலே.

பங்குபற்றியவர்கள்: 50
சரியான விடை அளித்தோர்: 28

அனைவருக்கும் எமது நன்றி.

---

✶ இம்முறை அதிர்ஷ்டக் காற்று திருகோணமலே வாசகர்கள் பக்கமே பரவலாக வீசியிருக்கிறது. பாராட்டுக்கள்!

(போ. ஆ.)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்து வரும்

காலம்: 4 - 9 - 88
நேரம்: மாலை 7.00 மணி

## புதிய உலகம்

- ☐ பார்த்ததும் - படித்ததும்
- ☐ பாரம்பரியம் காப்பாற்றப்படுகிறது (குறுங்கதை)

காலம்: 10, 11, 12 - 9 - 88
நேரம்: காலை 5-40 மணி

## கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்:
போதகர் A. J. ஞானப்பிரகாசம் அவர்கள்

காலம்: 13 - 9 - 88
நேரம்: மாலை 6-45 மணி

## சிறுவர் உலகம்

- ☐ விவிலியக் கதை

காலம்: 18 - 9 - 88
நேரம்: மாலை 7.00 மணி.

## புதிய உலகம்

- ☐ அலங்காரம் - (குறு நாடகம்)
- ☐ கைமாறு - (கதைச் சித்திரம்)

காலம்: 24, 25, 26 - 9 - 88
நேரம்: காலை 5-40 மணி.

## கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்:
அருள்திரு. பி. ஜோசப் அவர்கள்.

காலம்: 27 - 9 - 88
நேரம்: மாலை 6-45 மணி

## சிறுவர் உலகம்

- ☐ சிக்கனம் - (குறு நாடகம்)

நிகழ்ச்சித் தொகுப்பு: **மலர்வேந்தன்.**

---

(26ம் பக்கத் தொடர்ச்சி...)

## ★ வினாக்கள் ★

1. கிரேக்க மொழி பேசும் யூதர் என்றால் யார்? அவர்கள் ஏன் சுதேசிய யூதர்களால் புறக்கணிக்கப்பட்டனர்?
2. ஆதித் திருச்சபை இப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்து வைத்தது?
3. தங்கள் தூதுப்பணியின் ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் ஏன் ஏழு பேரை உதவியாளர்களாகத் தெரிந்து கொண்டனர்? அவர்கள் யார்?
4. புனித முடியப்பரைப் பற்றி முக்கியமான இரு சம்பவங்களைத் தருக.
5. முடியப்பர் கல்லால் எறிந்து கொல்லப்பட்டதேன்?
6. முடியப்பரின் கொலை நியாயமற்றது என எவ்வாறு கூறுவீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka.

எமது வெளியீடு !

## நாவண்ணனின்

# பயணம் தொடர்கின்றது

-: முழு நாவல் :-

- தொண்டன் சஞ்சிகையில் 20 மாதங்களாகத் தொடர்ந்து வெளி வந்து வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்ற இந் நூல் முழு நூலாக உங்கள் கைகளில் தவழ வருகின்றது.
- 'தொண்டன்' வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளிவரும் முதல் நாவல் இது. குறிப்பிட்ட பிரதிகளே அச்சாக இருப்பதால் ரூபா 25/- செலுத்தி உங்கள் பெயர்களை உடனே பதிவு செய்யுங்கள்.
- தொண்டன் இதழில் பிரசுரமாகும் தொடர் கதைகள், சிறு கதைகள், கவிதைகள் தொண்டன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து நூலுருவில் வரும் என்பதை வாசக நேயர் களுக்கு அறியத்தருகிறோம்.
- எமது எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது ஆக்கங்களை நூலுருவாக்கவும், தமிழ் இலக்கியச் சோலையை மேலும் வளப் படுத்தவும் நாம் தொடங்கவுள்ள வெளியீட்டுப் பணிக்கு வாசகர்களின் முழுமையான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு :- ஆசிரியர்,
தொண்டன்,
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

இச் சஞ்சிகை மட்டக்களப்பு "ஜெஸ்கொம்" (Jescom) அச்சகத்தில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 1988. 8. 31ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media